திருவள்ளுவநாயனுர் அருளிச்செய்த

# பஞ்சரெத்தினம்-500

பழைய ஓலைச் சுவடியிலிருந்தும்
சில அச்சுப் பிரதிகளிலிருந்தும்
சேகரித்து வெளியிடப்பட்டது.

பிரசுரித்தவர் :
B. R. பாலகிருஷ்ணன் அவர்கள்
சென்னை-79.

பதிப்புரிமை]   1992   Rs. 24-00

திருவள்ளுவ நாயனர் அருளிச்செய்த

# பஞ்ச ரெத்தினம்-500

வாலாம்பிகை துதி

## பாயிரம்

மஞ்சு தவழ்மலை மா நில மீதினில்
பஞ்ச ரெத்தினம் பனுவல் புகலவே
அஞ்ச லெனத் திருவருளை யுதவிடும்
வஞ்சி வாலாம்பிகை மாதைப் பணிகுவாம். 1

## பராபரம்

நாதாந்த சோதி நா நிலத்தில் நவிலுதற்குப்
போதாந்த வேதமது புந்திதனிற் பூரித்தாங்கே
வேதாந்த விந்துவுடன் வித்தைபெறக் கூடிநின்று
பாதார விந்தத்தில் பணிபுரியும் பரங்காப்பே. 2

## நூல்

ஞான வெட்டி நவிலாயிரத் தைந்நூறும்
ஆன நவ ரெத்தினமும் அறிவரோ—தானுமிது
பஞ்ச ரெத்தினத்தில் பகர்ந்திடவே சூட்சமங்கள்
நெஞ் சறிவிப் பதுவும் நேர். 3

## வேறு

ஓடி ஓடி உலகங்கள் சுற்றிய
பேடி கட்காகுமோ பேசரும் சித்தியும்
வாடி வாடி வருந்தினுல் வாய்க்குமோ
தேடி நின்ற திருவிளக் காடலே. 4

### வேறு

செம்பொ னிருபதமலரில் திகழ்பெறவே ஒளிசெய்ஞான
அம்பிகையின் அருளுற்ருர் அடைவார்கள் அநந்தயோகம்
இன்பமுடன் இந்நூலே இகழ்ந்தார்க்குக் கிட்டாதென்றே
நம்பினர்க் காதாரமாக நானவின்று விட்டேனே. 5

### வேறு

விந்துவிட்டால் நாதமது கிட்டாதென்றே
வேறுபல விதமாகச் சொன்னுர்சித்தர்
சிந்தைதனில் கற்பகமுண்ணக் கலங்குகின்ருர்
தெளிவாகக் கூருத குற்றத்தாலே
நொந்துகெட்டார் ஞாலமதில் மாந்தர்கோடி
நுட்பமது இன்னதென் றறியவில்லே
சிந்தைதனில் பெண்மயக்கம் கொண்டாலன்றே
சிதறிப்போம் காயமுடன் யோகசித்தி. 6

யோகசித்தி யாவதற்கு உலகத்துள்ளே
உத்தமனு யிருப்பார்க்கு அருளுண்டாகும்
யோகமுடன் மெய்ந்நாறும் யோனிக்குள்ளே
மூழ்கினவர்க் காவதுதான் நரகமாகும்
வாகுடனே காயமது யிருக்கவென்ருல்
வரையாகக் கற்பமதை யுண்ண வேண்டும்
வேகமுடன் வாலேயவள் அருளும்வேண்டும்
வீணுன உலகமதை மறக்கவேண்டும். 7

வேண்டுமென்ற உலகமதை மறந்துமேதான்
மெய்யான சற்குருவை நாடிநின்று
தூண்டுகின்ற சிந்தைதனே யுள்ளடக்கித்
தொடுகுறியில் சூக்ஷ்மத்தைக் கண்டறிந்து
தாண்டுகின்ற வகங்காரந் தனைக்கடந்து
தற்பரமாம் சுழுத்திதன்னில் சுகித்திருக்க
ஆண்டுமினி யேதுபிழை அறிந்தபேர்க்கு
ஆகாசகற்பமது தானே எய்தும். 8



எய்துவதற் கானதொரு மார்க்கந் தன்னே
இழிவெனவே நினைப்பார்க்குக் கற்பமில்லே
வைதவற்கு வகையதுவும் கிட்டாதென்று
வழங்கினர் ஞானப்பா லுண்டவர்க்குக்
கைதவமாய்க் கிடைக்குமருட் கடாக்ஷத்தாலே
கண்மூடி மெய்ஞ்ஞானந் தன்னுக்குள்ளே
செய்தவமாய் செய்பவர்க்குக் கற்பமுண்டு
சிலேபோலஅசைவற்ருல் சித்தியாமே. 9

சித்தியென்ருல் வாசியது நிலேக்கவேண்டும்
சிகாரத்திற் கும்பித்து நிலேக்கவேண்டும்
பத்தியுடன் யிருகலேயு மாறவேண்டும்
பந்தடித்த தனைப்போலப் பார்க்கவேண்டும்
சத்தியவள் வீடுதனைக் காணவேண்டும்
சரியான சுழிமுனையை அறியவேண்டும்
நித்தியமு மதன்வழி செல்லவேண்டும்
நீடித்து நிரந்தரமாய் நிற்கத்தானே. 10

தானுக முளைத்ததொரு சோதிகாணத்
தட்டாத முக்கோண வீட்டுக்குள்ளே
மானுகக்குதித்தோட வழியைக் கண்டால்
மதிரவியு மதற்குள்ளே ஒடுங்கிப்போகும்
ஊனுன காயமதை உறுதியாக்கி
உற்றதொரு இருமூன்று தலமுந்தாண்டித்
தேனுன கற்பமதை யுண்டுநாளுந்
தெளிவுற்ருல் இல்லேயினிப் பிறப்பிறப்பே. 11

### வேறு

பிறப்பிறப்பற்றுப் பிர்மானந்த போகத்தில்
பேர்பெற் றிருக்க மகாமூலி
நிறப்பமுதற்ற மயமாய் மலேமேலோங்கி
நிச்சயமாய் நிலேத்திருக்கும் உண்மையாகத்
துறப்பதற்கு முற்றதுணை தன்னேக்கண்டு
தொடர்ந்துசென்ருல் தூரமில்லே துணிவுற்ருர்க்கு
இறப்பதற்று இன்பமுடனிருக்க வென்ருல்
இனிதான ஏகவஸ்து அறிவாய்நீயே. 12

**வேறு**

அறிவிற்கிடந்து ததும்பி வழிந்து
அந்தரத் தோங்கி அடர்ந்து படர்ந்து
நெறியிற் செறிந்த நிலையாளர்கட்கு
நிதியதுவாகும் நெடுமுடி ஜோதி
குறியிற்கண்டு குணம்விட்டுக் கும்பித்துக்
கெடுவரையுச்சிப் பச்சை மரத்தின்
பொறியிற்கிடக்கும் புதையலைக் கண்டார்
போக்கில்லைகாயம் நிலைத்தலு மாகுமே. 13

**வேறு**

குன்றத்தில் ஏறியுங் கூத்ததனைக் கண்டாலும்
குன்றத்தில் இல்லைக் கூறியதே - மன்றத்தில்
ஓடிட்டிருக்கும் வெள்ளை யொள்விரை மலர்தோற்றும்
காடிட்டிருக்கு மதைக் காண். 14

ஒட்டத் திருக்கும் ஒண்முடியைக் காணுர்க்கு
எட்டிப் பறிக்க இயலாதே—பொட்டல்
நிலத்திலே பூத்திருக்கும் நிலைமைதனை யாரறிவார்
தலத்து நீரதுபோலே தான். 15

நற்கடுக்காய் வன்னிநிறம் நானிலத்தில் தானெடுத்துப்
பற்கடுக்காய்த் தானுண்டாற் பாலிக்கும்—சொற்கடுக்காய்
தோற்றுது போகிக்குத் தூயவர்க்கே கைகூடும்
மாற்றுன் மாமூலி மருந்து. 16

அரிதரிது கற்பத்திற் காதிகரு நெல்லி
துரிதமுட னதனைத் தூசகற்றி இருமுறையாய்த்
தானுண்டால் ஆறுதலம் தானுகத் தோற்றுவிக்கும்
வானுண்டால் மழை யுண்டுமா. 17

கோலத்திற் காயத்தைக் கொண்டிருந்த வல்லார்கள்
மூலப் புளியருந்த முந்திடுவார்-ஞாலத்தில்
அன்னையவள் காரத்தடி மடியில் தான்வளரும்
சொர்ண மதைக் கண்டார் சுகம். 18



**வேறு**

காரம் கண்டார்க்குக் கனகமும் சித்திக்கும்
சாரம் கண்டார்க்குச் சண்டனு மிங்கில்லை
காரமொடு சாரம் கைவிட்டா லுலகத்தில்
சீரதுகெட்டுத் திசை மாறிப் போவாரே. 19

இடைகலை பின்கலை இருக்கும் சுழிமுனை
நடுகலை யென்றிடும் நாதவிந் ததிகாரம்
தொடுகலை பனிரெண்டின் தொகைநாலு குறைந்திட்டால்
முடுகிடும் காரம் சாரம் மொழிந்தேனே. 20

ஆடும் சரக்குகள் ஆறெரு பத்துநான்கும்
ஓடும் காரசாரக் குருவதனைக் கண்டார்க்கு
நாடும் யோகமும் நானிலத் தினுடல் சித்தி
ஓடுமி தன்பெருமை யோகிகள் தங்கட்கே. 21

**வேறு**

அண்டமென்றும் அவனியிலே பலர்
அங்குமிங்கு மலைந்து தயங்கினுர்
பிண்டமென்று முயிர்தனைக் கொன்றுதாம்
பேதையாகி நரகத்தி லாழ்ந்தினுர்
துண்டமிட்டுத் துலைக்குந் தரும்பொருள்
சொல்லரிய பேரண்டமு மாகுமோ
கண்ட கண்டபடி வெளிகாண்கிலார்
கருத்தறிந்து கலப்பர்கள் ஞானியே. 22

ஆதியான வென்னன்னையின் அண்டத்தில்
ஆனவைம்பத் தோரக்ஷரத் தோடுசேர்
சோதியான சுருதி மூடியது
சொல்லவொண்ணுத சுத்தச் சுடரொளி
சாதிமதமொடு சமயத்திற் சண்டைசெய்
தன்மையர்கட்கது தானது கிட்டுமோ
ஓதிநூல்களின் நுட்பந் தானறிவரோ
உண்மையிலண்ட முனக்குள்ளு மாகுமே. 23

நாதமென்பது மண்டமு தென்றுமே
    நானிலந்தனி லாருறை செப்பினர்
பேதம்பேதமென் றேயுணர் பேதைகள்
    பேசுவதற் கெளிதாகுமோ அண்டமும்
போதமதுதரு மென்னப் புகன்றவர்
    புத்தியிற்சென்று புலப்படு மாதலால்
வேதமறைமுடி யண்டமும் நாதமே
    மேலுமிகமதி பிண்டமும் விந்துவே. 24

### வேறு

அகிலத்தில் அண்டபிண்டம் அதுவாகு நாதவிந்து
சகலத்தி னுக்குமது தானுதி—புகலும்
அண்டபிண்ட நாதவிந்து ஆகுங் காரசாரம்
கண்ட வர்களே யோகிகள். 25

### வேறு

உப்பைவிட்டு உலகத்து வாதிகள்
    ஓடிநூல்தனைப் பொய்யென் றிகழ்வர்கள்
அப்பை உப்பதில்விட்டு அகற்றுவார்
    ஆசையென்னும் பொய்க்கைப்பும் விலகிடக்
கைப்பையோட்டிக் கவின்பெறச் செய்ததால்
    கண்டுகொண்டார் கனகமாம் வேதைதான்
சொற்படிப்பின் தொகுத்திட்ட நூன்மறை
    தோற்றுமோ அப்புமுப்பு மறிந்திடே. 26

சிவயோகமுத்தி சித்திக்கச் செய்தார்
    பதிணெண் சித்தர்கள் முப்புவின்யாகம்
பவபோகமது கண்டால் பலிக்காது
    பாழாகும் ஞானமுட லழிந்துபோகும்
தவயோக முற்று ரவிமதிசுழிமுனை
    தன்னை நாடோறு முணர்ந்து
விவகார மற்றஞானிக்கு வாய்க்கும்
    வீணருக் காகா தாண்டே. 27



வெட்டிஞான மாயிரத் தைந்நூறில்
    விரித்துமே உரைத்திட்டதோர் கல்லுப்பு
கட்டியாகவே காணும் கடற்குள்ளே
    கதிரவன் றன்கருணை விதத்தினுல்
கெட்டியான கல்லுப்பது கட்டினுல்
    கேவலம்மினி மில்லையிப் பூவினில்
அட்டியேதினி முப்பு முடிந்திடும்
    அம்மைவாலை யருளினு லாண்டையே. 28

### வேறு

மங்கையர் மகுடமன்னர் மதித்திடு மந்தமுத்தும்
பொங்கிடுஞ் சிப்பியாக அகரநீர் நடுவேயாழி
முங்கியே எடுக்கும்போது முத்தினும் ஜோதியென்னக்
கங்கையிற் கிட்டும்கிட்டும் அதீதகல்லுப் பிதாண்டே. 29

### வேறு

பஞ்ச ரெத்தினத்திற் பகர்ந்திட்ட சூக்ஷ்மம்
சஞ்சல மகற்றிடும் தனிவழி காட்டிடும்
கஞ்சனில்லை வேதை கல்லுப்பறிந்த வர்க்குப்
பஞ்சுபோல் நவலோகநீறும் பார்தனில் குறியிதே. 30

### வேறு

மூலமா மமுறியுப் பதுரெண்டு
    முடித்திடுவார் முப்புச் சுண்ணமும்
ஆலகால விஷம் போலவே
    அறுபத்து நான்கையும் நீற்றிடும்
வாலைமாது நாத தீக்ஷையால்
    மாசுநீங்கிப் பரம மாகிடும்
கோலமாங் குருகடாக்ஷமும் பெறக்
    கூடிடு மிந்தச் சுன்னமே. 31

**வேறு**

செக மெங்கும் சிவசெந்துகட் காதாரம்
உக மெங்குங் கறியுப்பென் றறிகிலார்
இக மெங்கும் ஏரிவாரியிலு முண்டு
சுகந்தரும் சொரூப மீதாண்டையே. 32

**வேறு**

பானமென்றும் அமுறியென்றும் பாரில்சித்தர் செப்பிய
ஞானமா மதுவுமென்ற நாட்டமும் நற்காடியே
ஊனமான உடலைநீட்ட வுபாயமான மாதநீர்
பாணையிற் கிடந்துசீறிப் படிந்திருக்கு மாண்டையே. 33

**வேறு**

புத்திமானறிவன் பூநீரின்உப்பு பூதலத்திலா றறிவார்கடான்
சித்திமுத்தி வைராக்கியம் சேர்ந்திடில் உடன்கிட்டிடும்
சத்தியுமை சடலத்திதழ்தனில் சதுர்க்கோண வட்டமாகவே
வித்தியாச மறவேகிடைக்குமது விண்டிட்டேனது தெரிந்
[திடே. 34

விந்தமுரி வேகமேயறிந்து செயவேணும் குருபலனதுவே
இந்திரனுப்ப திதுவெனவே இகத்திலே யினியறிவாரார்
சுந்திரச் சொரூபஉப்பது தோற்றுமே சிவயோகிக்கே
இந்தஉப்பி னுலும்முப்பது இகத்திலேசித்தி ஆண்டையே.

**வேறு**

துதிபெருகும் புவிதனிலே சுகா தீதமான
கதிபெறவும் கனிவுடனே பாரைஉப்புக் காண்பரோ
மதிநீரினடி தனிலே வதிந்துறையு முப்பு
அதிசயமீ தாரறிவார் அகத்திய னருளாலே. 36

வாயுவுடன் வன்னிகூடி வையகத்து நீரில்
தாயுந்தந்தை யாகச்சேர்ந்த வாறுபோற் சனிக்கும்
ஆயும்போது பாரையுப்பு ஆனதித னுலே
மாயுமேசரக்கு எல்லாம் மகிதலத்தி னுப்பே. 37



**வேறு**

சித்தராலும் காண்கிலாத தேவவுப்பு உவர்சத்திதன்
வித்துங்கூடிச் சாரையுப்பு மேவினு யிரண் டாச்சுது
சுத்தநீர் சலக்காடியால் தூய்மையாமது சுண்ணமே
இத்தரையி லிந்நூலைப்போல் யாருரை செய்வாராண்டே.

தீக்ஷைநீர்தனை யாரறிவார்காண் தீம்புனலது சாகரக்
காக்ஷிநீ ரதுகோடியே யிதைக் கண்டயாவரும் விண்டிலார்
ஆக்ஷியாகவே மறைத்தாரிந்த அம்புவியி லநேகர்கள்
தாக்ஷியாகக் கைவிட்டனர் தன்மையாக விந்நூன்முறை.

மாதுநாத மெனச்சிறந்தது மங்கை மார்தினம்கூடியே
நீதியாகவே கூட்டுவாரிது நேர்மைகண் டுணர்வாரிலை
சேதியேதெரியாத தாலிதிற் றோர்ந்தவர்புவி மீதிலை
ஆதியாநம தன்னையாள் அண்ட நீர தறிந்திடே. 40

வாசிபோலவும் உன்னுள்ளேயிடை பின்கலையென வாய்
ஊசிநீரதுஓடுமேயினி உய்த்துணர்ந்திடுவீட்டிலே [மையா
கூசிடாமலே தினம்தினம் கொண்டு உண்டிடக்காயமே
நாசமாயழியாது நாதநீர் நவிலுறும் சுத்தக் கெங்கையே. 41

சுத்தகெங்கை மாதுநாதம் சுயம்ப்ரகாச சோதிரூபம்
சித்தியாகித்தெளிந்ததாமிது தீக்ஷைநீரென்றுரைப்பார்கடா
சத்தி வாலையென் அன்னையாள் சடமூன்கரு வான்தால்[ம்
சுத்திபுத்தியுந்தொடத்தகும் தோஷமில்லைகேளாண்டையே

மறைத்தது சுத்தகெங்கை தீக்ஷைநீர் மாதுநாதமுரி
கள்ளுதான், நிறைத்தது கருங்குருவை கொண்டுமது நெல்
லினுமி நீக்கியே, கறைத்துநற்பருவ வன்னியிட்டுமே
காய்ச்சியே விடுசோடசம், இறைத்த காடியது ஏகமே
சிவநீரென்று குருஓதினுர். 43

அச்சலநீர் சுத்தசல மெனப்புகல்வார் அறிவினுல்
மெச்சுமென் குருவகத்தியர் சொன்ன மேன்மையால்
இச்சையாகவே தீக்ஷை செய்துமே இயற்றினேன்
அச்சமேது மில்லாமலே ஆனமுப் பூவின் சுண்ணமே. 44

கும்பமுனி யருளினால் கூறினேன் ஞானவெட்டி
அம்புவியிலுள்ளோர்க்கா வறைந்தேன் எண்ணூர்சுருக்கி
நம்பினபேருக்காக நவின்ற பஞ்சரெத்தின நூல்
வம்பில்லை பிசகுமில்லை வழியது சுருக்கமாண்டே. 45

## வேறு

காடி விட்டுக் கடைச் சரக்குகளை
நாடி விட்டுப் புடமிட நன்மையாம்
கூடிக் கெட்டுக் குடிகெடும் வாதிகள்
வாடி நட்டமிட்டு நலிவார்களே. 46

ஆறு திங்கள் அறுசுவைக் காடிதான்
நீறிடும் நவலோகத்தை நீற்றிடும்
வீறுயர் பெறும் மேனி பொன்னாகிடும்
கூறு கெட்டவர் கொண்டிடார் உண்மையே. 47

## வேறு

கங்குல் விடியாமே கதிபெறவும் காத்திருந்து
பொங்கியதைத் தானெடுப்பார் பூதலத்தில்—தங்குமனு
மாசியிலும் சித்திரையிலும் மன்னு பங்குனிதனிலும்
மாசறு பூநீரை மதித்து 48

உவற்சாரம் என்றே ஓதிவரும் பூநீரை
எவர்க்காயும் தோற்றுது இவ்வுலகில்—சவர்க்காரம்
கண்டாரேகண்டார் கலிவிலக வண்ணாரே
அண்டாருக் காகா தது. 49

## வேறு

ஆதிப் பூநீரும் அத்துடன் கல்லுப்பும்
பாதிப் பாரைப் பனியுப்பும் சுத்தநீர்
வேதிப் பாருக்கு மேதினியி லிம்மூன்றும்
பாதிக்காதநற் பாதைகாணுண்டையே. 50



## வேறு

சோமன் விந்துநீர் பூமிநாத மெனச்
சொல்லிய புவி சுண்ணநீர்
தாமலைந்து தவியா விதந் தனக்குத்
தன்மையான நிறம் வெண்மையே
கோமகன் தொழுமகத் தீசன் வர்க்கமெனில்
குடிசை கட்டியு மெடுத்திடும்
க்ஷேம மாகுமினித் தீமை ஓடிவிடும்
தீக்ஷை யாகவு மிதித் திடே. 51

செகமாய்கை யது தீர்ந்திடா விடிலே
செய்வதேது நல் யோகமும்
வெகுமாய்கை மனம் யோனியாசை தனில்
வெம்பியே கீழிழுத்திடும்
சுகமாகமனம் அலையாதிருக்கச்
சொல்லினர் பதினெண் சித்தர்தாம்
அகமாய்கை தனை நீந்தினால் வரும்
ஆத்ம ஞானம் பூநீரகே. 52

வெள்ளையான நில வுப்பிதற்கு நிகர்
வேறுஏது இது மேதினிக்
கள்ளமே யகலக் காட்டினர் சுத்தக்
காக்ஷியாகவே மதியினால்
துள்ளு மப்புவியில் தோன்றியே யெழும்பும்
தூய்மையான தோற்றப்பதைச்
சள்ளையே யறவும் கைப்பு நீக்கியே
சந்திப் பார்கடா மாண்டையே. 53

சித்தமொடு புத்தி யகங்காரம் போமே
சிற்றறி விலாது மனந்தன்னை நோக்கி
இத்தரையில் உய்த்த இடர்களுக்காக
இசைந்திடாமலு மசையா மலுமே
முத்திமோன வைராக்யந் தன்னிலே
முச்சுடர்க் குறி வைத்துமே
நத்தியே யிருந்தானுடன் வரும்
நாயன் சொல் திருவருளுமே. 54

இச்சை யென்ன இகபர மிரண்டிலும்
இதமாய் மனதை வைத்தால்
உச்சிதமான உலக ஆசையது
உற்பவமா யிருக்கையினுல்
அச்சமேது இரண்டுமற்ற
ஆனந்தம் பரி பூரணமே
பக்ஷமேவிப் பதிந்திருந்தால் வரும்
பாக்கியமீ தாண்டையே. 55

சந்திர புஷ்கரணி தீர்த்தமும்
சலியாத பானமமுரி கள்ளுதான்
சுந்திர மாகவும் பிண்டத்தில்
தோன்றுமே கண்டத் தானமே
சிந்தையாலறி சிவராஜ யோகமாம்
சித்திவிலாச நற் சாதனே
புந்தியோடு புரிந்ததால் சுத்தப்
புனித ஞகவும் வாழலாம். 56

### வேறு

முப்பு முப்பென்று முன்னமே செப்பிய
வைப்பு இப்புவிமீ தறிவார்களோ
அப்பு முப்புவும் ஒன்றென் றுணர்வரேல்
கைப்பு முப்புக் கசடற முப்புவே. 57

கண்டு கொண்டு களர் நிலமீதினில்
பண்டு நின்றபடி யந்தத் தாயினே
மொண்டு வந்து முழுவதும் காய்ச்சினுல்
விண்ட உப்பும் வெடியுப்பு மானதே. 58

வெடிஉப்போடு விகசித வாலேக்கல்
பொடிசெய்தே தினம் போட்டிடு மூசிநீர்
வடிவதாகவே வன்னியை மூட்டுமே
படியதாகநீ காய்ச்சிப் பணிந்திடே. 59



ஊசிநீர் என்றும் ஓதிடும் சுத்தநீர்
காசினிதனில் காடியென்றே தினம்
யோசியாமலேயு் உலகங்கள் சுற்றினுல்
கூசிடாது குடிகெடு வார்களே. 60

உப்பு வென்றதை உதரிநீர் விட்டிடில்
தப்புமோ சடலந் தரியாதுகாண்
செப்புமார்க்கந் தெளிவுறத் தேர்கிலார்
இப்புவிப்புரி வாளடியி னியக்கத்தால். 61

### வேறு

போற்றும் புவிநாதம் பொங்கும் கடலுப்பும்
ஊற்றுநீர் பாறையுப்பும் உட்கூட்டித் - தேற்றமாய்
கைப்பாகந் தானறிந்து காரணத்தாற் செய்தக்கால்
மெய்ப் பாக முப்பா குமே. 62

### வேறு

இடைகலை பின்கலை எதிர்சுழி முனேதனில்
தொடுகலை நெறிதனேச் சொற்குரு வருளினுல்
படுகலை யிதன்பயன் பாக்கிய சாலிகள்
திடகலை யெனத்தினந் தேர்ந்து மிருப்பரே. 63

### வேறு

முப்புச்சுண்ணம் முடித்தார்க்கு ஆயுசு முடிவுமில்லை
இப்புவிப் பாசமில்லை இகலோகசாதக மிதுவுமாகத்
தப்பிடாது தனியாஞ் சொரூப சுயஞ்சோதி யிதுகண்டார்
செப்பிடார்கள் யோகபாகமும் செய்பாகமு மாண்டையே.

### வேறு

குருமுனி யருளினுல் கொண்டே ஞன்
முப்புவும் கொடுமை நீங்கத்
திருமுனி சொன்ன மார்க்கம்
திகைப்பில்லை திசைஎட்டும் காட்டிடும்

கருவினியேது முப்புவின் கைவல்ய
மநுபோகம் விட்டால்
கரும மோடுமே கருணைகர ஞான
காரணன் கிருபையே. 65

வேறு

பொழியுமே ரவிமதி பூதலந்தனிற் புணர்ந்தநீரால்
அழியுமோ சடலம் ஆதையறிந்து தினமுண்டால்
பழியு மேது படர்பவமோடிக் கடல் புக்கிடும்பாரிது
இழிவினோர்கட்கிது கைகூடாது எண்ணூ றைந்நூறே. 66

எண்ணூறைந்நூறு முலகதனின் யோகிக்கே எய்தும்
பொய்ந்நூல் என்று தள்ளினல் சாவுவரும் உண்மையே
முன்னூலா மென்னூல் மூவைந்நூறும் முழுதறிந்தார்க்குப்
பின்னூலா மின்னூல் பிசகில்லை தப்பாதாண்டே. 67

கதிரொளியால் ஆனதொரு விந்து நாதம்காரமீறிப்
பதிதனிலே மதிவிந்து வுடன் கூடிப் பிள்ளையாக
உதித்திடும் அதின் சூக்ஷமம் உய்த்துணர்ந்தால்
விதியேது வினையேது மெய்ஞ்ஞானி தானுண்டே. 68

சுக்கிலஞ் சுரோணித மென்று சுருதிக ளரைந்திடும்
கக்கிடும்எண்ணெய் கழட்டறியாப்பதர்க ளொன்றுகூடி
மக்கிடும் மங்கையர் ஊன்தேடி மதியழிந்துபோனுர்
எக்கலிட்ட நதிபோல் இவர்வாழ்வு இற்றதிறுலாண்டே. 69

இப்படியர்க்கவும் கண்டவர் இகமதிலே வெகுவாயில்லை
சொற்படிகேட்டுசுட்டுச் சுட்டுச் சுருதியை இகழ்ந்துநிற்பார்
செப்பிடு வித்தைமீதார்ச்சு செகதலமயக்க மிதனுலல்லோ
கைப்பதுநீக்கிக் கசடதுபோக்கிக் கனிந்துநில்லே. 70

நெருப்பாறு என்றுமே நெறியாய்ச்சொன்ன நூல்களுக்கு, விருப்போடு உரையுணர்ந்து விண்ணிற்கப்பால் ஊசலாடும், அருப்போடுமயிர்ப்பாலம் அதனைத்தாண்டி அகண்டத்துள்ளே, பொருப்பாரு மதியமுதம் புசித்தார்க் கன்றே காயசித்தி. 71



வேறு

மதியமுதம் என்று பலர் மறைப்பாய்ச்
சொன்னுர் மனிதற்காக
மதியமுதம் மதியற்றுர் வண்ணுனைக்
கேட்டறிந்தால் கிட்டிப் போகும்
பொதிசுமந்த கழுதைபோல் பூரணத்தை
யறியாமல் அலைந்தாலந்தோ
விதிவிட்டுப் போமோ மேனேக்கிக்
கும்பிக்கத் தெரியா தாண்டே. 72

வேறு

வாசியென்றும் வழலையென்றும் கெங்கையென்றும் வன்னியென்றும், ஊசியென்ற உதகமென்றும் உவரென்றும் பூநீரென்றும், தேசியென்றும் காரமென்றும் செயநீரும் சாரமென்றும், பேசிப் பேசிச் செத்தாருலகோர் 73
பேதிக்க வகையறியா தாண்டே.

வேறு

தன்னையறிந்தவர்க்குந் தானன்றே வானத்துள்
அன்னையவள் வந்து ஆதரித்து—முன்னைப்
பவமோட்டிப் பாலூட்டிப் பக்குவமாய் மேற்கூட்டிச் 74
சிவநிலையைச் சேர்ப்பாள் சிறந்து.

பிண்டத்தின் மேற்குப் பிரிதிவு தான்கிழக்கு [ளே
அண்டத்தில் அடிமுடி யென்றருச்சிப்பார்—விண்டுமுள்
காணுச்சுழி முனையைக் கண்டார்க்குப் பிண்டத்தில் 75
மாணு மண்டலிக்கும் மருந்து.

வேறு

பூத்தவுவர்க் களத்தில்—ஆண்டே
பூரண மோங்கி நிற்கும்

ஆத்தாள் தனையறியா—தாண்டே
அறிவு கெட்டுமாண்டரே.

மாசுமரு வறியா—ளாண்டே
மக்கட் பிறப் பறியாள்

ஆசை விடுத்த வர்க்கு—ஆண்டே
அன்பாய் உபசரிப்பாள்

ஊற்றைச் சடலமிது—ஆண்டே
ஓடோடப் பார்க்கிறது

நாற்ற மெடுத்தவர்க்கு—ஆண்டே
ஞாயம் பிறக்குமது

காத்தை அடைத்த கப்பல்—ஆண்டே
கறை காண மாட்டாமலே

பார்த்த பெரு வெளியில்- ஆண்டே
பாய் மரந்தான் முறிய

தாயை மகன் மறந்து—ஆண்டே
தாரத்திலே கிடந்தால்

மாயும்வகை பதின்மர்—ஆண்டே
மாயை மயக்கத்தினல்

காயத்தின் பொக்கி ஷத்தை—ஆண்டே
காண வகை யறியார்

வாயைத் திறந்த பிள்ளை—ஆண்டே
வர்மம் தெரிந்ததுவே

எண்சா ணுயரமது—ஆண்டே
ஏறவகையு மில்லை

பெண்சாதி ஆசையல்லோ—ஆண்டே 76
பின்னுக் கிழுக்கு திங்கே.

வேறு

நட்டகம்ப மீதிலே நாட்டியங்கள் செய்குவார்
வட்டமிட்ட வாசியை வழியதாய்த் தெரிந்திடில்
எட்டும் ரெண்டும் இன்னதென்று ஏகமாய்த் தெரிந்திடும்
அட்டியில்லை யெங்களகத் தீசனுணை உண்மையே. 77



உண்மை யென்ற அக்ஷரம் ஓங்கிநின்ற குண்டலி
பெண்மை யென்றடிபணிந்து பேணிமேலு மேற்றினல்
தண்மையான யோகமுக்கால் தானும்வந்து வாய்த்திடும்
வெண்மையான உவர்நிலத்து உப்பறிந்து மேவிடே. 78

பஞ்சபூத மொன்றுசேர்ந்து பார்தனிற் படிந்துமே
மஞ்சுலாவு வாசியோக வாழ்வினிற்கு ளாதியாய்
மிஞ்சியே படர்ந்தமூலி வேதையிற்கு மேகுமே
வஞ்சமும் மறைப்புமில்லை வழலையின்றன் போக்கிதே. 79

போக்கிணைத் தெரிந்து மூவர்பூத்த மண்ணிலத்திலே
நோக்கிடவே நீலவர்ணம் நுட்பமீது வெண்மையை
நீக்கியே எடுத்திடில் நிச்சயம் கைகூடிடும்
மூக்கியம் நிலவளத்தை முன்புநீ அறிந்திடே. 80

அறிந்தநீல உப்பதும் ஆண்டையே பூநீரது
சிறந்தநீல உப்பைநீக்கிச் செய்யவீண் பாடாகுமே
உறைந்த பஞ்சவர்ணமாம் உப்பதில் விளைந்தது [யே.
நிறைந்தநீலஉப்பதென்று நிகழ்த்தினேன் கேளாண்டை

ஆண்டையேநீ யந்தவுப்பு அறிந்துமே எடுத்திடில்
தாண்டுவாய் பகிரண்டமெல்லாம் தஞ்சமென்று முந்தனை
வேண்டிச்சிவ யோகியோடு விஞ்சையரும் மேவுவார்
காண்டிவம் போலிந்தவுப்புக் கைதனில் மறைந்திடே, 82

உப்புடனு மாணைக்கல்லை ஓதியாறு திங்களாய்
வைப்பறிந்து வைத்தகாடி வானநீரில் சுத்தியாம்
செப்பிய விரைந்துதீக்ஷை சீருடன் முடித்திடில்
கைப்புநின்ற கசிவுநீங்கிக் காரசார மானதே. 83

காரசார மானவுப்பே கருதிமுன்னம் சாற்றிய
பாரஞான வெட்டிதன்னில் பகர்ந்தனம் நல்முப்புவென்று
தேற சொற் பதத்தைக்கண்ட தீக்ஷையின் பெருமையால்
பாரில்முப்புவை முடித்துப் பார்த்தனர் சிவயோகரே. 84

## வேறு

மூலப்புளிச்சுன்னம் முப்புவென்று மொழிந்தோம்
மூவுலகில் யிதன்பெருமை யாரறிவார்
ஞாலத்தினில் நீலவுப்பின் நன்மை நிலவளம்கண்டு
நாடியே நாதவிந்து கூட்டிக்
கோலத்துடன் வெட்டி சொன்ன குறிப்புணர்ந்து
கூறிய முப்புச் சுண்ணமாக்கி
சாலத்திடம்பெறச் சடலத்தில் தினமுண்டால்
சாற்றிய சாவுதானேது ஆண்டே. 85

பூமிநாதமெனும் பூநீரதுதான் புகலும்நீலநிறம்
புனித முடனதைச் சாடிநீரதில்
சாமிநாதகுரு பரனருளால் அதைத்தான்கலக்கிச்
சாமமூன்று வைத்துத்தெளி விறுத்துக்
காமிவாலையருள் விந்துவையும் கொண்டுதாக்கிக்
கடிதினிற் கூட்டிடு கெங்கையால்
நேமமாகவே பூநீருடன் சேர்த்துச் சமாதிவைத்து
நேரதாகவே எடுத்திடு மாண்டையே. 86

விந்துநாதமது காரசாரப்பெருமையா லொன்றுகூடி
விகசிதம்செய் முப்புவாய் முடிந்ததுகாண்
சந்திரஞெளியாலே கடலினுப்பது நாதமே
தாரணியி லதினடியில்தோற்றும் சிவவிந்துவும்
முந்திக்கொண்ட முறைப்படிக்கு நாதவிந்தும்
முற்றிலும் சுத்தகெங்கையால் சுண்ணம் [தில்
இங்கிதன் சூக்ஷ்மமறிவார் ஞானவெட்டி மூவைந்நூற
ஏகவஸ்து அதை ஆரறிவாராண்டே. 87

## வேறு

ஏகமென்றமுப்புவிற்கு எழிலான சுத்தசலம் இதனால் தீக்ஷை, பூசுமென்ற குருவருளால் யோகிகட்கே யீதெய்து மாறுவீது, ஆகுமென்றுசொன்னேன் ஆகையால் ஆடியோடி மாய்தலின்றியே, போகமென்ற மயக்கும்நீக்கிப் பூரித்துக்கும்பித்து ரேசியே. 88



## வேறு

அப்புவுடன் வன்னியும் ஆனதோர்
இப்புவியில் ஏகமாய் இருந்திட—ஒப்பியதோர்
ஆதி வழலை ஆகுமே யீதறியும்
சேதியிந் நூலினுற் செய். 89

பூதங்கள் ஐந்தும் புலனைந்தும் ஒன்ருக
ஏதங்கமின்றி ஏரி போல்—ஆதங்கம்
நீங்குமொரு வாரிதியாய் நேர்மையுடனேயிருக்க
ஈங்குஇனி வறுமை ஏன். 90

சாகர நீரைச் சடுதியிற் ருனறிந்து
பாகமதா யுப்பைப் பண்படுத்திச்—சாகசமாய்த்
தீக்ஷைதச பத்தும் தீவிரமாய் நீமுடித்துக்
காட்சி வழியிலே காண். 91

சுத்தப் பெருவழியாய்த் தோற்றும் துரியாதீத
வித்தைக் கிலக்காய் மெய்யினுக்குள்—எத்தைக்
கொண்டால் குவலயத்தில் கூத்தன் வரானென்று
விண்டார்கள் ஞானிகளின் மேல். 92

காயத்திற் கன்னம் கனமாய்ப் பிரதானம்
ஞாயத்திற் கிதுவும் நளினமே—ஆயத்தில்
திங்கள் இருமூன்றில் சேதுமாய்ச் சுத்தசலம்
பொங்கும் வழியதனைப் போற்று. 93

## வேறு

அடிமுடியிரண்டும்போக ஆதாரம் நடுவிருக்கும்
ஆகமத்தைத் தான்மறந்து ஆதியிலே
கொடுமுடியென்றுமனம் கொண்டுமே சித்தர்கள்
கூறியதோர் நூன்மறைப் பதனுற்ருமே
நெடுமுடி வாலாம்பிகை நீலியவள் பாதம்
நிலையாக மறந்துபல போக்குமுற்ருர்
படுமுடிபாதாளமூலியது பரந்து பாருலகில்
பதிந்திருக்கும் சூக்ஷமத்தை யாரறிவாராண்டே.

அறிந்தவரேசித்தர்முதல் விஞ்சையர் யோகிகள்
அந்தரர் வித்யாதரர் அவர்கள் ஆனார்
செறிந்துமணற் பாங்குதனில் செகசோதிநீலமாம்
செனித்ததோ ராணைக்கல் லதனலன்றோ
நிறைந்ததோர்பூமிநாத வழலையென்று பூத்திருக்கும்
நிலைதனிலே மெய்மறந்து வீணதாகக
குறைந்துமேகெட்டார்கள் குவலயத்தில்குண்டலியாள்
குறியறியாச் சண்டாள ராண்டே. 95

நகாரமதேநாயகியாள் நிலைபெற்ற வீடதாகும்
நானிலத்தில் அதன்மேலே நவின்றிட்ட
மகாரமே அவளூசல் ஆடும்வாசல் அதற்கப்பால்
வதிந்ததொரு மணிபூரகம் சிகாரமாச்சு
வகாரமேவழலையாச்சு மணிநடந் தான்புரியும்
வர்ணமா மண்டபமு மதுவேயாச்சு
யகாரமேமுப்புவின் அடைவுமாச்சு அரிமாலீசன்
அம்மூவர் அதற்கப்பால் ஏகமாண்டே. 96

வேறு

அண்டத்தில் முப்புவாய் முடித்து அறியுடனே
பிண்டத்திற் கொண்டால் பிலக்குமே வாசியது
மண்டலத்தி லிதன்மாட்சி யறிந்த மானிடர்க்கு
எண்டிசையும் கிருகிரென்று நடுங்கு மென்னுண்டே. 97

சுண்ணநீரது பின்னமிலை சுருக்கான வழியது
மண்ணிலே யோகசித்தியோடு வாதவைத்தியஞ்சித்தியாம்
கண்ணிலே மைபோட்ட கசடருக்குக் கிடைக்காது
விண்ணிலே யிருந்து விளையாடு மாகாசமாண்டே. 98

வேறு

விந்துநாத மென்றுசொன்ன மேதினிப் புறட்டெலாம்
வந்தவிதமேது இரண்டு வாறதாக வாய்க்குமே
அந்தநாதமே அறிந்தால் விந்துவேறு யில்லையே
இந்தவாதமே மறைத்த பூட்டறியு மாண்டையே. 99



விந்துவோடு நாதம்கூடி விளைந்துமே யிருக்கையில்
நொந்துமேவி வேறதாக நோக்கினுல் கிடைக்குமோ
சந்திரன் கலையினுல் சனித்தநாதம் விந்துவாம்
அந்தகன் போல்சுற்றினுல் அகப்படுவ தில்லையே. 100

ஏகவஸ்து என்றுமே நாம்இனிய ஞானவெட்டியில்
பாகமாகச் செப்பிய பனுவலை மறந்துமே
நாகம்போலச் சீறியே நானிலத்தில் சுற்றினுல்
ஆகுமோ நன் முப்புமுறை ஆண்டே முடியாததே. 101

வேறு

உலகதனில் உப்பும் புளியுமதைக்
கைவிட்டால் உடலதழியு மென்று
உச்சிதமாகக் காரசாரமதை நாடியே
உணவினிற் பெருக்க ஊட்டி
இலகு மானிடர்க்கிது ஏற்றதென்றுமே
ஏந்திழை மார்கள் சமைப்பார்
இதனையறியாமலே மதிகெட்டுப் போனவர்
இகம்தனிலும் கோடாகோடி
அலகைபோல் புவிதனிலே சுற்றியே சரக்குகளை
அடுப்பிட்டு வன்னி மூட்டி
அவித்தவர்கள் எத்தனைபேர் அறைவதார் அவர்சிறு
அநந்தஉடல் நீத்து மாண்டார் [மை
கலகமலர் பொருதுமதன் கணைக்கிலக் கியமானுர்
கதியற்று வீணி லாழ்ந்தார்
கருதகுண்டலி யன்னை கருணை பெற்றுர்களே
கற்ப தேகிக ளாண்டையே. 102

வேறு

நாற்சதுரக் குழிவெட்டி நல்லஇருள் தனைநீக்கி
நடுமதி பூர்ண நிலவிலே
ஆச்சரிய மெண்சாண் அளவு குழியதுசெய்து
அடுக் கடுக்காய் மிதித்தே

பூச்சதுர மதுநின்று பூத்த நாதமது
பொங்கிவரு மஞ்சு வர்ணம்
நீச்சலறி யாதவர் நிலைதவறி மாண்டனர்கள்
நேர்மையறி யாமலாண்டே. 103

பாய்ச்சலது நாலையது பார்த்தால் பசுவாகப்
பாவித் திருக்கு மடங்கி
மூச்சதுவே வாசிநுனி முன்பின் பிறழாது
முனை நடுவில் தாரை போல
வீச்செனவே ஓங்காரச் சங்கொலி நாதமூட்டும்
வித்தகர் நிட்டை தனிலே
ஏச்சுமிலை அகத்தீசர் அருளினால் பாடினேன்
அறிவாளிகட் கெய்து மாண்டே. 104

வேறு

உவர்சாரமது சலமுவர்நீர் உலகினில் சத்தசாகரநீர்
நவச்சாரமென்று பலரேங்கினர் நாதநீர்வாரிதிநீர்காண்
தவச்சாரல் மலைநாவொன்முகில் தண்ணெனக் குளிர்ந்த
உவப்பேது இதுபோல உண்மை யைந்நூற்றிலாண்டே 105

வானொடு முகிலும்கூடி வன்னியின் பெருமையாலே
கானொடு காற்றினாற்பண் கட்டியே வித்துமாச்சு
மானொடுங் கண்ணிவாலை மதியமுதினை யருந்திச்
தேனொடுங் காயசித்தித் திடமான வுடலமாண்டே. 106

பார்த்தார் பரிதியொடு மதிமயங்கிப் பரவிப்பூத்துக்
காத்தால் கண்களிற்படும் காடதில்குடிசைகட்டி
வேர்த்தார்க் கன்றே விதிகொலைந் தறிவுமேவும்
ஆத்தால் அம்பிகை யோகியானவர்க் கருளுமிதே. 107

வேறு

நச்ச னிருத்தன் நாயகன் கண்டமே
இச்ச கந்தனி லின்னதென் றறிவாரோ
பச்சை மேனிப் பகவதி யானவன்
மெச்சு மருளினால் மேவித் தெரிவரே.



ஆலகால விஷமுரி அதுதான் பானமும்
சீலமாக அதன் நஞ்சு நீக்கியே தெளிவதாய்
காலமீதி லனுதினம் காலைமாலைநீ உண்டிடில்
ஓலமிட்டு மறலியோடு மோடுமீ துண்மையே. 109

வேறு

சுத்த கெங்கைச் சுகாதீதச் சுருதிகள்
மெத்த மெத்த விதங்கள் விளம்பிடும்
நித்தம் நமதில்லில் நிலவிய நீரெனச்
சித்தர் செப்பும் மறைப்பது ஆண்டையே. 110

வேறு

அந்திசந்தி அமுரிமூலப் புளிஉண்டு
அட்டாங்க யோக நியமமும்
உந்திமூலச் சுழியறிந்து கும்பித்து
ஓங்கி ஏகவஸ்து தன்னில்
சுந்திரக்கனல் மண்டையோடதனில் தாக்கிட
சுடர்த் தாரம தாகவே
முந்திநின்ற வர்க்கன்றே முத்திசித்திக்கும்
மோக்ஷ வழி யாண்டே. 111

வேறு

அன்றுரைத்த ஞானவெட்டி மூவைந்நூறும் அகத்திலோதி
நன்றெனப் பின்புகலு மெண்ணூறும் ஆராய்ந்து
மன்றிளாடும் வாலாம்பிகை பாதம்பூசித்துத் தெளிந்து
கன்றுபோல் கைதேர்ந்தெடுப் பார்காண் ஐந்நூற்றே. 112

குளகமாகவும் பாடியவெந்நூலெலாம் இலக்கணக் குறிப்பாளர், அளகமாகவும் காண்பார்காண் அஞ்சனக்கண் போற் கற்றறிவார், தளகமாகும் தள்ளாடிக் கண்மூடித் தவறிதைச்சேர்வார், புளகமாகும் புலவோர்க்கிது குறிப் புணர்ந்தால் புண்ணியமே.
113

கன்னியபிராமி யருள்கடைக் கணுேக்கம் கருத்தி
லுண்டு, பின்னமின்றி யிந்நூலிந்நூறும் பிரிந்துணர்ந்து
தேர்ந்து வன்னியொடு கால்மீறவும் வதனமாதர் தமை
நீக்கியே, உள்ளிஞர்க்கிது வாய்த்திடும் ஒண்முத்திசித்தி
யீதாண்டையே. 114

வேறு

சூதவிந்து கன்னிநாத கெந்திசுத்த சலத்திஞல்
வாதம்வந்து பலிதமாகு வண்ணத் தீக்ஷையால்
பேதமேது பிசகொன்று மில்லையினிப் பேசவே
ஆதிவிந்து அமுரிநாத மென்றதும் அநாதியே. 115

வேறு

சூதமெனும் விந்துவதன் சூக்ஷுமத்தைத் தானறிந்து
நாதமுடன் தான்கூட்டி நானினத்தில்—மாதருளால்
வாதமுடன் வைத்தியமும் வாசிமுதல் வான்குளிகை
நீதிபெறவே பெருகும் நேர். 116

வேறு

ரசசூதவிந்து மூலிபானமதால் நவின்றுஎண் சித்திகூடும்
பிசகாதுயிது அறுபத்துநாலும் பெருமித மாகவேநீறும்
அசையாத நாதம்அத னுேடுவிந்து அமுரிவிட்டு
வசைபோடச்செய்ய வாய்க்குமே காயசித்தி யாண்டே. 117

வேறு

விந்துவுடன் நாதமது மேவியேநற்கெங்கை யொடு
சுந்தர காசசமாதியில் தோன்றிவரும்—அந்தவுப்பு
முப்புவென்றே யறிவார் மூலத்திலே தெளிந்தோர்
அப்புமுப்பு மொன்ரு னதால். 118

அலேகடல் மேவியே ஆனதுகாண் சாகரம்
விலேயற்ற மாணிக்கம் வேறேது—கலேகற்று
ஆய்ந்த சிவயோகி அன்பால்தன் பெருமை
தோய்ந்துணர்வா னிச்சை துறந்து. 119



மங்கையர்க் கணிகலம் வாரிதிவாழ் கிளிஞ்சியதில்
தங்கியமுத்து வாணிகர் தராதலந்தனி லெடுப்பார்
பொங்கியகடலில் விளேயும் நுரையே பூதலந்தன்னில்
சங்கையிலாத கல்லுப்பிதை யாரறிவார் தன்மையமே. 120

மேவும்கல்லுப்பதனே விந்தையாய் விரவி யெடுத்துத்
தாவுதனேயறிந்து தன்மையாய் நாதமுடன் கூட்டி
ஓய்விலாமல் சுத்தசலம் விட்டுத்திரிநாள் உய்த்தெடுக்க
ஏய்வுமேது யிதுசமாதி இருநில முப்புவாண்டையே. 121

வேறு

முப்புச் சுண்ணம் முடிந்தவர்கட் கன்ரே
இப்புவிச் சரக் கெல்லாம் இரங்கிடும்
தப்பிலாத சடல உப்பதை யறிந்து
சொற் பிரகாரம் சுருதி காணுமரோ. 122

வேறு

அம்பிகை பாதத்தடிமலர் அநுதினம் பூரணமாய்
நம்பிக்கும் பித்தேரேசிக்க நாடுமோவினே நாட்டினில்
வெம்பி வாடி வீணிலுழைத்திடும் வேதியர்க்குச்
செம்பினூறல் செக தலத் தோடுமோ சிறிதாண்டே. 123

வேறு

உன்னில் ஒடுங்கும் உதகநீர் தன்னேயுநீ
இன்னிலத்தில் கண்டால் எய்துமே—பன்னியதோர்
காயத்தில் சட்டை கருத்திலது தான்தள்ளித்
தேயத்தில் உருதிசெயம் தேர். 124

வேறு

செகமதில்சித்தர் சொன்னசிறப்பது மனிதர்கள் ஏமாந்து
இகமதில் கோடாகோடி இட்டமதாய் சரக்கதனே நீற்று
வகைபெறவழியறியாதுமயங்கினர்வழலேதனேயறிந்து [டே.
சுகமுறத் துறைத்தனேக்கண்டார் துரிசற்ருர்க்கிது தாணண்

வாய்த்ததோர் வழலைதன்னை வன்னியில் சலம்விட்டுக் காய்ச்சி, மாய்த்திட மறுபிறவி அதீதசுத்தநீரில் மதிப்பெய் தும், காய்த்திடாமூலி கபாலவழலை கருத்தி லுணர்ந்து கொண்டு, தோய்த்ததனை வாங்கிக்கற்ப மோராண்டு தேறச் சித்திக்குமே. 126

ஏறுமீரெட்டு என்றுமே இறுமாந்து கும்பித்து
மாறுதலறியாது வாய்ப்பது குடல்போய் வலித்துச்
சீறியகுறியால் சூலைபோல் வாட்டுமது தேர்கிலார்
ஆறுவிதகற்பம் அற்பமோ யிதுதான் ஆண்டையே. 127

வாமப்பால் என்று மறைத்துவைத்தார் வாயாற் சுத்த கெங்கை, நாமத்தால்சொல்லாது நவின்ருரதன் மருத்துவ மாரறிவார், காமத்தால்சடலம்வெந்து கதிமாறிக் கருத்த கச டர்தாம், சேமத்தால்வாழ உதகநீர்சித்திக்கும் சமாதிவைப் பதாலே. 128

வேறு

காமத்திஞல் காயமதழிந்த கசடர் கடாம்
ஏமத்திஞல் ஏதுகாண்பர்காண் நாதமெனும்
ஓமத்திஞல் உதகம் பொங்கியே ஊசிநீராம்
நாமத்திஞல் வழங்கும் நாரியர் கைப்பாகமீதே. 129

பத்துவயது கௌளரி பகர்வாலாம்பிகை மூலி
சித்தர்மோக்ஷ யோகசிவநிலை வதியும்நீலி
பித்தர்கள் பாலர்போலப் பிதற்றியே ஊர்த்திரிந்தால்
எத்ததுகாண் கிலார்கள் எய்திய பத்துத்தீட்சை. 130

முக்கோணவட்டம் முதிரப் பருவம் முளைத்தெழுந்த
இக்காய நட்ட நடுவிருக்கும் எழிற்ருயம்மாள்
விக்காமலேறி விளையாடஓதும் வேதபாகமோர்ந்த
அக்கால மன்ரே அடைவார்கள் அட்டசித்தி. 131

வேறு

அமுத மென்னும் அச்சலம் நீரதும்
திமிர்த மிட்டுமுள் தேகத்திற் றேங்கிடும்
உமிழும் நீரதென் ருலுணர் வார்களோ
குமிழி நீரது போலக் குறிப்பிஞல். 132



வேறு

வீரமாம் வெள்ளைக் கல்லுப்பறிந்து விரைவதாகச்
சாரமீதென்று சமுசய மற்றுச் சலிப்பற்றுக்
காரமென்ற நாதநீர் கலக்கியே தெளிவிறுத்து
வாரிநீரதுவான விபரமிது வழுத்துவார்க ளாண்டே. 133

வேறு

இந்த விந்திளை யாரறிவார்கள் காண்
மந்த மாருத மானதும் வன்னியும்
சொந்த மாகச் சுருக்கினில் கூடியே
வந்த உப்பது முப்புவென் ருேதிடே, 134

வேறு

எண்ணத் தொலையாது ஏரிநீர் மேவியபேர்
பண்ணத் தொலையாத பாதகர்தாம்—விண்ணதிலே
தாஞெடுங்கித் தாரையாய்த் தவத்தோருக் காய்வீழும்
வானுதகம் வந்த திதுவாம். 135

பஞ்சமா பாதகத்தில் பாரினுளே வாய்மடுத்துப்
பஞ்சைப்போல் வண்டிளைத்து மாதர்கடம் மிஞ்சியெழு
மா நனத்தில் வீழ்ந்தாலே வாய்க்குமோ யோகமெனும்
ஆதனத்தில் ஆவதுதான் அன்று. 136

வேறு

நிலத்தினின் நேர்மையை அறிந்து நெறியதாம்
தலத்திடைத் தோன்றும் சாதகமாய் நாதமதின்
மலத்திளைப் போக்கி மாண்புடன் கொண்டவர்க்குச்
சலத்துடன் மலம்கட்டிச் சாதிக்கும் கற்பமாண்டையே.

மலசலவாழ்விஞல் மாய்ந்தனர் மண்ணில் பலகோடி
நிலசல மிதுவென்றுணர்ந்து நிலமதில் வெடியுப்பறிந்து
கலசலமாலை காலையினு மருந்திக் கருத்திலுய்த்துச்
சலனமதற்று நிற்பார் சதாகோடிகாலம் சமாதிதனிலே,

வழலையின் போக்கறிந்தால் வழங்கிடும் வாதமாகும்
நிழல்என நின்றுநானும் நீடூழிவாழ எண்ணிச்
சுழல்விழிமாதர் நோக்கில் சுற்றியே மடியும்பேய்க்கு
அழலது மூலத்தாமோ அகத்தீசனருள் தானுண்டே. 139

வேறு

எங்கள்குரு அகத்தீசன் இன்னருளால் நாதமது
பொங்கிவழி நிலமடைந்து பூரணத்தை நானறிந்து
கங்குலுடன் பிசகற்ற கருநிலத்தில் தான்வாழ்ந்து
எங்குமொரு சத்தியென இகமதனிற் கண்டேனே. 140

வேறு

சத்திநாதமது வழலையெனச் சாற்றினுர் சத்தியாவது
எத்திலாது மாதருணர்வர்க ளில்லையகத்தி லின்பமுடன்
முத்தியோக பூர்வமது மோனவழியறிந்து முன்பாகச்
சித்தியாகும் சிவயோகம் சிலாக்கியமீ தாண்டையே. 141

முச்சந்தி வீதிமுனை மாராதிது மயிற்பால் வாசல்முடிவற்ற
இச்சந்தி யறியச்சகமதனில் இயலாது விருப்புற்றுர்க்குத்
தற்சந்திர ஞௌிமேவிய பனியினுல் நாதமுவர்சாரமாய்
பொற்சந்தி யாகும்வெகு வேதைமேவும் பூவுலகிலாண்டே.

வேறு

யோனியது நான்குவகை யோசிக்கில் தோற்றமேழ்
மானிலத்தி லித்தை மதிப்பார்யார்—வானிலத்தில்
வீழ்ந்த உதகநீர் மெய்கருக்கும் கற்பமாம்
ஆழ்ந்திதனை ஆய்ந்தார்க் கமை. 143

பூரித்து ரேசித்துப் பூரணமாய்க் கும்பித்து
ஏரிட்டிருக்க யார்க்கும் ஏலாது—வீரிட்ட
விந்ததனைக் கட்டறியார் மேதினியில் வீணர்கடாம்
அந்தகனுக் காலாகு வார். 144



வேறு

அலைவழங்கிடும் மதஜலந்தனில் ஆதியா மகத்தீசனுர்
கலைமுழங்கிட நாதநீரதில் கருதியே முன்விளக்கினுர் [னுல்
நிலைவிளங்கிடச் சித்தர்கள்தினம் நேர்மையாயதன் உப்பி
மலைவழங்கிடத் தீட்சைபத்துமே மதிப்பதாக முடிந்ததே.

வேறு

சுருதிமாமொழி மூத்திரம் மெனச்சொல்லும் சாகர
மமுரியே, வருதியேதிதன் மார்க்கமேகண்டு வாய்மையா
யுலகெய்தினுல், நிருதிமேவி யிழைக்குமே யிதன் நிட்சயம்
பதினெண்சித்தர், கருதியேசெய்த கபடுகண்டவர் காட்சி
கூடுவ ராண்டையே. 146

கலசநற்சல மதுவுமூசிநீர் கரகமாமுனி யருளிய
நிலசலத்தினில்நிலைவதாகவும் நித்தமும்பலபுத்தியாய் [மே
அலைசலந்தனை அறிவினுல்தினம்அண்டிக்கொண்டுடவாகு
விலையிதற்கிணை யேதுபூமியில்வித்தைவாதமுமாண்டையே.

வேறு

அப்பதனை விட்டால் அட்டமா சித்தியேது
உப்புஎன்று கடல்உவறி னுற்கைக் கூடுமோ
முப்புவானது அப்புவென்று மொழிவா ருண்மையாய்ச்
செப்பினுலுமேசித்தராவரோ ஜெகதலப்புரட்டாண்டையே.

பூதலத்தில்அநேகங்கோடி புண்ணியராய்ப்போவாரென்று
வாதவித்தை என்றதொரு மாய்கைதனைக் காட்டிவைத்தார்
சாதகத்திலே தெளிந்த தன்மையோரிது தான்தொடார்
பாதகத்தி லாழ்ந்திஞேர் பாரிற்காண்கவு மாகுமோ. 149

சாத்திரத்தி லநேகம்பேர் சாதித்தார் தயவதாகப்
பாத்திரத்தில் கோடிபேர் பண்டையினில் சித்தராக
ஆத்திரத்திற் சொன்னநூல் ஆதியில் மொழிந்தார்காண்
காத்திரத்திற் காயசித்தி கற்பமிதி லாண்டையே. 150

கற்பமென்று மேமொழிந்த காட்சியையார் காண்குவார்
அற்பமென்று இதனைவிட்டு அமர்ந்தபேர்கட் காகுமோ
சொற்பதங்கள் சூட்சியாகச் சோதித் தறியாமலே
பற்பலதுறை ஏகினுர்கள் பண்பினுலுல காண்டையே. 151

வேறு

வழலைதொட்டு வாதம்கண்டு வானமாமலை யேறியே [யை
உழலுமா ந்தர்க ளுய்த்துமே உணர்வார்களோ கனசோதி
அழலுமேவிய குண்டலியருள் அன்பினுல்வரும் சாகரக்
கழலிதைத்தெரியாதுகாட்சியில் கண்டுமெலிவர்கள்கசடரே.

சோதித் துரியாதீதச் சுடரொளியில் தோன்றிவரும்
ஆதிப் பராபரையை அம்புவியில் ஆரறிவார்
சீதத்திரு வைச்சடலத் திகைப்பற்றுருக் கிதுவே
காதற்றவூசி கடைத்தெருவில் விலையானதே. 153

ஆணைக்கல் என்று ஆதிரிப்பபைத் தானறிந்து
ஊனக் கைப்பதணை உருதியாப் போக்குவித்து
மானக்கிருபை வாய்க்க மதுவுண்ட வண்டதுபோல்
தானுந் திருந்தினர்க்குச் சடலமது வீழாதாண் டே. 154

வாதகுரு விந்துநீர் வாய்க்குமது நாதநீர்
பாதையிது நீரறியப் பாகம்வா மோனவிழிப்
போதமுற வந்துதிக்கும் போகம்விட வேயழியும்
நீதமிதைத் தானறிந்து நிட்டையுங் கைகூடிடவே. 155

வேறு

விந்துநாத மென் றவிரு மேம்படு நற்பாகமே
இந்தவேதை தானுணர ஏற்குமே—சந்ததமும்
யோகமெனும் சுழிமுனையில் யுத்தியுடன் சாதிக்கத்
தேகமது திடமுள்ளதே. 156

தேடித் திரிவார்க்குச் சேவியிலே சித்தியது
நாடி யிருக்குமதை நாடுகிலார்—பாடிக்
கறக்கும்வகை யறியாக் காதகர்க்குப் பாலேது
இறக்கும் துறை யறியாரே. 157



ஆதியென்ற நாதமது அண்டம்திற் ருனேது
சோதியென்று தொல்லுலகி லாரறிவார்—வாதிகள்தாம்
கடைச்சரக்கைத் தான்சுட்டுக் காய்ந்தார்க ளல்லால்
இடைச்ச ரக்கால் ஆவதுதான் இன்று. 158

சுத்தச் சுகாதீதச் சோதிச் சுடருப்பு
இத்தலத்தில் விந்துவென ஏகமாய்ச்—சித்தர்களும்
வைத்தார் அதன்பெருமை வையகத்திலே யறிந்தால்
இத்தரணி ஞானி இவர். 159

வேறு

அண்டபிண்டம் ரெண்டுமாகி ஆனதோர் கல்லுப்பினுல்
விண்டநாத மேலெழும்பி விளைந்தது உவர்க்காடதில்
தெண்டனிட்டுத்தூபதீப பூசையிட்டுத் தெளிவதாய்க்[யே,
கொண்டபேர்க்குக்கூற்றுமில்லைகூறினேன்மெய்யாண்டை

நாதமென்ற உப்பினேடு நவின்றவிந்து கூடியே
ஆதிகார சாரத்தாலே அமைந்ததே சொல்முப்புவும்
நீதியாக யிந்தவந்த ரங்கங்கண்டு நேர்த்தியாய்ச்
சாதனைசெய் வாருமாகில் சண்டனேது ஆண்டையே. 161

சாகரத்திலே தெளிந்த சலந்தனில் கலக்கியே
வாகுரத் தெளிவிறுத்து வைத்தநீரும் காடியாம்
ஏகமான இந்தவஸ்து இனிமையாக நீயறிந்து
பாகம்செய்யச் சுண்ணமாச்சு பார்த்திடு மதிகமே. 162

உலகமீதில் முப்புவின் பெருமையால் உணர்வினேர்
கலகமாதின் வாழ்வைநீக்கிக் காட்சிமேவி மௌனமாய்
இலகுவாலை கன்னியின்பம் ஏறியண்ட மீதினில்
மலையுமித்தை யறிவரோகாண் மகத்துவ மீதாண்டையே.

மன்னுமுவர்க் காடதனில் வைத்திருக்கும் உப்பதை
இன்னிலத்தி லேயறிந்து ஏகியே எடுத்திடில்
சொர்னமாகும் சுத்தமாகும் ஜோதியுப்பின் பாகமாம்
இன்னமும் ஏமாற்றமேன் இந்தநூல்போ லில்லையே. 164

வேறு

சந்திரனொளி மேவிச் சாகர நீருப்பாச்சு
சுந்திர காயமாச்சு ஜோதிமுடி துலங்கலாச்சு
இந்திர னுப்பறிந்து இதுதனை முடிக்கவல்லார்
சந்ததம் யோகநிட்டை சாதித்து மிருப்பாராண்டே. 165

வேறு

மாதுநாதமே காரசார மகிமையால்
மகிதலத்தி லுவரது போக்கும்
தீதுராதுமே அணுகாது திகழ்பெரு
முதகநீர் சுத்தஜலப் பெருமை
ஓதுமிந் நூலைந்நூறில் உணர்த்தினேன்
உலகின ருய்யும் வண்ணம்
சாதநீரதே சுத்தஜலம் சந்தேகமில்லை
சாஸ்திரங் கள்கூறிய தாண்டே. 166

ஓங்கார நாதம் பிரணவ மூலம்
உதித்த மதியமுதம் உந்திக்கமலம்
தாங்காத சத்திதன்னருட் சுயம்ப்ரகாசம்
சவிஸ்த்தார மீதாச்சுது காண்
பாங்கான மாது வாலாம்பிகை
செகஜ்ஜோதி பாதாரவிந்த சூக்ஷமம்
நாங்காணறிந்த தில்லைநடனப் பிரபல்யம்
நாடும தீதமெ னுண்டே. 167

விந்துநாத மிவ்விரண்டும் விஷம்போக்கும்
வெகு கடினமிதை யாரறிவர்
தந்தையோடு தாய்மருவிய தன்மையைப்போல்
தாரணியில் செனித்த தாலே
அந்தமேது ஆதியேது அந்தவிந்துநாதம்
அடிமுடி நடுவு மின்றியே
வந்தவாறு வகை சொல்வேன்
வழலையுட கூத்தினுலு மாண்டே. 168



கற்பூரமொடு தீபம்கலந்த பாவனைபோல்
காணுமந்த விந்து நாதம்
பொற்பாருஞ் சுத்தஜலம் புகலவா காசமாச்சு
புதுமை வெகு அற்புதம்
கற்பான நல்மாது சுரோணிதநீரிற்
கண்ட சலசல மிதற்கு
ஒப்பான திப்புவி யிலேது
உளுத்தர் களுக்காகா தறிந்திடே. 169

சித்தாதி யோகி முனிவர்க்கிது
சிலாக்கியம் சிறப்புற் றிருப்பர்காண்
இத்தாதி மார்க்கமறிந்தார் வாழ்ந்தார்
ஏனையோ ரிறந்து பிறப்பரே
முத்தாதி சிப்பிமுனைந் தெடுப்பர்
முடிவில் முழுகியநல் வஸ்துவாம்
சுத்தோத கம்வெகு துல்லியம்
சுடர்நீர் சுயம்பிரகாச மதாண்டே. 170

ஞாலத்தினில் செனன உயிர்பிழைக்க
நல்லருட் சத்திரவி யுதயமாய்
மூலத்தினில் கண்ட வெப்பமது
முனைவழி கபாலமேற லாச்சுதிந்தச்
சாலத்தினை யறிந்தால் சடலமுறுதியாம்
சண்டன் வெகு தூரந்தான்
பாலொத்திடு மொழிச்சி வஞ்சிவாலாம்பிகை
பாதம் பணிகு வேனே. 171

வேறு

நாடோறும் நானுண்ட கற்பம்
நாட்டினி லறிவாரில்லை நாதவிந்து
நாடேறும்படிச் சங்கற்ப விகற்பந்
தாண்டி நூல்வழி தெரிந்து
காடான மார்க்கக் கசடுநீக்கிக்
கடிதினில் ககனமார்க்கம் சென்றேன்
பாடானபாடிது பகரவொணுச் சூக்ஷமம்
பரதேசி யறிவா ராண்டே. 172

### வேறு

வித்தில்லையென்றால் விளைவேது காண்
    வீணன மூடர்களழுது புலம்பிச்
செத்துமடிந் தாரிப்பூதலத்தில் சிவராஜயோக
    மறிய மாட்டார் செப்பும்
வத்துவான திதுவெனவறிந்து வத்துவாய்
    வனுந்திர மோடிப் பிழைப்பார்
சுத்தசை தன்யப்பெரு வெளியில்
    சுலபமாய்க் குருவருளா லாண்டே. 178

### குருவிலார் கொடுமை

நாட்டில்விளைந்த நாலுவித சரக்குகளை
    நாய்போல் விலைக்கு வாங்கி
மூட்டையிட்டு எருமுட்டையில்
    வன்னியிட்டு மூண்டஅழலில் மாய்வார்
சாட்டையின்றிப் பம்பரம் சுழற்றுவார்கள்
    தமக்கான குண மிதுவே
ஏட்டைப்படித்து இஷ்டம்போல் பிதற்றும்
    இழிவானவர்க ளாண்டே. 174

காயமழிந்தால் உலகிற் சித்தியேது
    காரியமின்றிக் காரண மில்லை
ஓயும்சர ணங்களழிந்து உன்மத்தர்போல்
    வாழ்வார் உய்த்து ணர்ந்தார்
பாயும்கலையறிந்து பட்டியிட் டடைத்துப்
    பரவெளி துரிய வாழ்க்கைக்
காயம் அறுபத்துநான்கும் அடங்கும்
    அதுவு முப்பினு லாண்டே. 175

### வேறு

நிலவுப்பும் நீலவுப்பும் நேர்மையாக ஒன்றினுல்
மலவுப்பும் மாய்ந்துபோக வாய்த்ததுமவ் வுப்புமே
சலவுப்பென் றேயறிவர் சாத்திரங் கைதேர்ந்தவர்
பவளமப் போருப்புமுவ ருப்பெனப் பகர்வாரரோ. 176



நித்தமந்த வுப்பையுண்டு நீணிலத்தி லநேகரும்
மெத்தவும் மெலிந்துபோனுர் மேன்மையாகச் செப்பிய
வித்தையை யறிந்துதீட்சை விதியதை உணர்ந்துமே
வைத்தவுப்பு வைப்புமாச்சு வஞ்சமில்லை யாண்டையே.

நன்மைதீமை யென்றிரண்டு ஞாயமுமிப் பூமியில்
வன்மையாக வேகலந்து வைத்தனர் மகத்துக்குள்
பன்மைபோக்கி யேநுகரப் பாதைகாட்டக் குருவருள்
இம்மையிலே கிடைக்கலாய்தும் நன்மையென்ற றிந்திடே.

அப்புஅப்பு என்றுரைத்த அரியசூத சுத்தநீர்
இப்புவிச் சரக்குகட்கு ஏமனுயி ருக்கையில்
வைப்புவைத்த வுப்புவிட்டு வல்லமைகள் பேசினுல்
தப்புண்டாகும் பொய்மையில்லை சயிலநீர் குறித்திடே. 179

கோடிசூரியப் பிரபையாற் குலாவுகின்ற வானநீர்
சாடியே கரைத்திடிற் சகலதோஷம் போக்குமே
காடிநீரி தற்குப்பேர் கருத்தறிந்து செய்திடில்
ஓடிப்போவ னேமனும் உண்மையாகு மாண்டையே. 180

கற்றவர்கள் காடதிற் கதித்தெழுந்த உப்பினை
நற்றவப் பயனினுலே நாளும் சுத்தசாகரம்
உற்றநீரில் சுத்திசெய்ய உருதியாச்சு காயமும்
மற்றவாறி னுலுமாவ தில்லையே யேமாற்றமே: 181

பஞ்சபூத மொன்றுகூடில் பளிங்கு போலதீதமாம்
விஞ்சையுப் பென்றேவழங்கி விளையும் பூமிநாதமே
நஞ்சதாகும் நாதநீரில் நாட்டுதோஷங் காற்றினில் [யே.
பஞ்சுபோல் பறந்துபோகும் பாட்டைசொன்னே னுண்டை

சுத்திசெய்த உப்பினேடு சொல்லும்விந்து கூட்டியே
இத்தலத்து விந்துவுந்தான் எய்தும்சுத்தி கெங்கையால்
வைத்தநற் சமாதியில் வதிந்தஉம்புச் சுண்ணமாம்
நத்தும்புட பாகங்கண்டு நாளும்நீ எடுத்திடே. 183

### வேறு

வித்தில்லையென்ருல் விளைவேது காண்
வீணுன மூடர்களழுது புலம்பிச்
செத்துமடிந் தாரிப்பூதலத்தில் சிவராஜயோக
மறிய மாட்டார் செப்பும்
வத்துவான திதுவெனவறிந்து வத்துவாய்
வளுந்திர மோடிப் பிழைப்பார்
சுத்தசை தன்யப்பெரு வெளியில்
சுலபமாய்க் குருவருளா லாண்டே. 173

### குருவிலார் கொடுமை

நாட்டில்விளைந்த நாலுவித சரக்குகளை
நாய்போல் விலைக்கு வாங்கி
மூட்டையிட்டு எருமுட்டையில்
வன்னியிட்டு மூண்டஅழலில் மாய்வார்
சாட்டையின்றிப் பம்பரம் சுழற்றுவார்கள்
தமக்கான குண மிதுவே
ஏட்டைப்படித்து இஷ்டம்போல் பிதற்றும்
இழிவானவர்க ளாண்டே. 174

காயமழிந்தால் உலகிற் சித்தியேது
காரியமின்றிக் காரண மில்லை
ஓயும்சர ணங்களழிந்து உன்மத்தர்போல்
வாழ்வார் உய்த்து ணர்ந்தார்
பாயும்கலையறிந்து பட்டியிட் டடைத்துப்
பரவெளி துரிய வாழ்க்கைக்
காயம் அறுபத்துநான்கும் அடங்கும்
அதுவு முப்பினு லாண்டே. 175

### வேறு

நிலவுப்பும் நீலவுப்பும் நேர்மையாக ஒன்றிஞல்
மலவுப்பும் மாய்ந்துபோக வாய்த்ததுமவ் வுப்புமே
சலவுப்பென் றேயறிவர் சாத்திரங் கைதேர்ந்தவர்
புவளமப் போருப்புமுவ ருப்பெனப் பகர்வாரரோ. 176



நித்தமந்த வுப்பையுண்டு நீணிலத்தி லநேகரும்
மெத்தவும் மெலிந்துபோனுர் மேன்மையாகச் செப்பிய
வித்தையை யறிந்துதீட்சை விதியதை உணர்ந்துமே
வைத்தவுப்பு வைப்புமாச்சு வஞ்சமில்லை யாண்டையே.

நன்மைதீமை யென்றிரண்டு ஞாயமுமிப் பூமியில்
வன்மையாக வேகலந்து வைத்தனர் மகத்துக்குள்
பன்மைபோக்கி யேநுகரப் பாதைகாட்டக் குருவருள்
இம்மையிலே கிடைக்களய்தும் நன்மையென்ற றிந்திடே.

அப்புஅப்பு என்றுரைத்த அரியசூத சுத்தநீர்
இப்புவிச் சரக்குகட்கு ஏமனுயி ருக்கையில்
வைப்புவைத்த வுப்புவிட்டு வல்லலமகள் பேசினுல்
தப்புண்டாகும் பொய்மையில்லை சயிலநீர் குறித்திடே. 179

கோடிசூரியப் பிரபையாற் குலாவுகின்ற வானநீர்
சாடியே கரைத்திடிற் சகலதோஷம் போக்குமே
காடிநீரி தற்குப்பேர் கருத்தறிந்து செய்திடில்
ஓடிப்போவ னேமனும் உண்மையாகு மாண்டையே. 180

கற்றவர்கள் காட்டிற் கதித்தெழுந்த உப்பினை
நற்றவப் பயனினுலே நாளும் சுத்தசாகரம்
உற்றநீரில் சுத்திசெய்ய உருதியாச்சு காயமும்
மற்றவாறி னுலுமாவ தில்லையே யேமாற்றமே. 181

பஞ்சபூத மொன்றுகூடில் பளிங்கு போலதீதமாம்
விஞ்சையுப் பென்றேவழங்கி விளையும் பூமிநாதமே
நஞ்சதாகும் நாதநீரில் நாட்டுதோஷங் காற்றினில் [யே.
பஞ்சுபோல் பறந்துபோகும் பாட்டைசொன்னே னுண்டை

சுத்திசெய்த உப்பினேடு சொல்லும்விந்து கூட்டியே
இத்தலத்து விந்துவுந்தான் எய்தும்சுத்தி கெங்கையால்
வைத்தநற் சமாதியில் வதிந்தஉம்புச் சுண்ணமாம்
நத்தும்புட பாகங்கண்டு நாளும்நீ எடுத்திடே. 183

சுண்ணமென்ற குகையில்மூடிச் சுத்திசெய்த உப்பிணே
வண்ணமாகச் சீலெசெய்தவ் வாறுபோல யெருவிஞல்
நண்ணியே அழலிவிட நல்லமுப்புச் சுண்ணமே
எண்ணிஞலு மாகுமோ எளிதலவீ தாண்டையே. 184

வேதையென்ற மாற்றினுக்கு வெய்யநற் குருவுமாச்சு
ஆதியென்ற உப்புமாச்சு அதீதசொர்னஞ் சித்தியாச்சு
சோதிகாண வழியுமாச்சு துரிசுமே பளிங்குமாச்சு
சேதிசற் குருவருளால் செனனமில்லே யாண்டையே. 185

வேறு

மதிமயங்கிக் குருவருள் வழங்காமாந்தர்
நதிமயங்கி நாதவிந் தறியார் நாதவிந்தின்
பதிமயங்கிப் பலநாளும் பார்த் திருப்பார்கள்
விதிமயங் கிச்சேட்டை செய்விணே யகற்றியே. 186

வெட்டவெளியாகு மிந்நூல் விபர மறிந்தால்
தொட்ட சரக்கெல்லாம் சுருக்கினில் வேதை
இட்டமாக வாழலாம் ஏகாந்த மாகவும்
கட்டமேது கனகமுன் கைக்கப் பட்டாலே. 187

வேறு

மாற்றுயர் வாயிரம் வழிபோற் சென்ருருக்குக்
கூற்றுவ னேது குறையேது குவலயத்து
மாற்றமேது மண்பெண் ணுசையேது
ஏற்றும் வகையறிந் திருந்தார்க் காண்டே. 188

மூச்சைப் பிடித்து முனேவழி மாற்றறியார்
பேச்சைப் பேசிப் பேடிபோல் திரிவார்
மூச்சிஞல் ஆவதேது முடிவுண் டாகும்
ஏச்சுவாராத ஞானிகட் கிழக்கி தாமே. 189

வேறு

காற்றைப் பிடித்தடைத்த கரகங்கண் மூடும் கணக்கில்வருங்
கூற்றை யறிந்து குணுபவச் சுழிமுனேகண்டு
ஆற்றைக் கடக்கமயிர்ப் பாலம்யா ரறிவார்
நேற்றைக் கிருந்தவ ரின்றில்லேயென்பது நிச்சயமே. 190



சொன்ன ஞானவெட்டிச் சுருதி கண்டும்
பொன்னே மேவுவரோ பெரியோர் பொய்பேசார்
இன்னுமிவ் வுலகில் எத்தனேபேர் ஞானியானுர்
அன்னே குண்டலி அடிமலர் அவாவினுலே. 191

ஆத்தாளருட் சத்தி ஆயிதுமாரி கன்னியவள்
பூத்தாட்பணியக் குருவருள் புனேந்து நிற்பார்
பார்த்தால் பரமம் படித்தால் பற்றெழியும்
காத்தாடிக் கயிறிந்தக் காயபாச மாண்டே. 192

வேறு

பாசக்கயிர் தெரிந்தும் பந்தமெனு மாபாசக்
கோசங்கள் தாண்டிக் குண்டலியின் தாளின்ப
நேசத்திலே கலந்து நிர்மலமாய் நிற்குமவர்
வாசற்குளன்ருே வையமும் வாய்த்த தாண்டே. 193

பாகினில் தித்திப் பெனப் பண்புடனுர்ந்த
சாகசத்தில் சகலரும் மாய்ந்தார் சகதலத்தில்
யாகமுட னனேக அதிக்ரமங் களிஞலாமோ
யோகநெறிபற்றி நின்ருர் யூகிகள்தா ணுண்டே. 194

அட்டாங்க யோகத்திற் காதாரம் அபிராமி
தொட்டாங்கு நின்ற துரியாதீதச் சுழினேதனில்
பட்டார்க்குக் காட்டும் பரமபதம் பாதகர்க்குக்
கிட்டாது கிருபையின் குருவழி கேளாண்டே, 195

வேறு

சாதிமத சமயபேதமதிற் சண்டையிட்டுச்
சலிப்புற் றகங்கார
மாதியான வல்லலிலகப்பட்டு அலறி
அலகை போலுலவும்
நீதியேது மறியாமனுவர்க் கத்தினர்க்கு
நிலேக்காது எண்சித்தி
காதுபோன ஊசி கடைத்தெருவில்
என்செய்யும் கடினமிதாண்டே. 196

வெட்கமே துமிலாதுவெய்ய வினைதான்
 வெருவிட மிரண்டுகொண்டு
பக்கமேவும் பணியினர்அரவப் படமதனில்
 பாகுதே னுண்டென்று
கக்கலைப்போற் குலவிநக்கிக் குலுக்கிதிரிந்து
 குடிக்கு மடையர்கள்
சொர்க்கம் மேவச்சுருதி சொல்லுமோ
 சூக்ஷ்ம விந்தினையறிந்திடே. 197

எக்கலிட்டிருக்கு மடுவுதனில் இழிவரோ
 மனிதரிளைப்பாற இதனால்
கைக்ககப்படுவ தெதுவெனக் காண்கிலார்
 கடிதினில் நரகதுபுக்கி
மக்கியமிரு கண்களிற் பீளைசொரிய
 மழலைபோற்குரலது தளரப்பின்பு
விக்கலிட் டிறப்பர் இதுதினமறிந்தும்
 விடுபட வழிதேடு கிலாரே. 198

**வேறு**

மட்டற்ற செம்பொற் சோதி
 மரகதத் தொளிதிகழ் மனோன்மணி குண்டலி
பட்டப்பகற் போல்பரந்த வெளிதனில்
 பராபரை நடம்புரியப் பார்த்திருந்தும்
தட்டற்ற சுகவாரிதி யழுந்திச்
 சகசவாழ்வுதா னித்திய சண்டாளர்கட்குக்
குட்டிச் சுவர்மேல் குவலயத்தில்
 குருவருளால் முத்தி யாண்டே 199

சத்தந் தன்னொடு புலனைந்தும்
 சடலமிசை ஒடுங்கிச் சதானந்த மாயிருந்து
நத்தும துறையறிய நாடோறும்
 சற்சங்கமொடு ஞானநூற் கேள்விவேண்டும்
பித்தங்கொ ண்டுதலை கிறுகிறுத்துச்
 சரக்குகளைப் பேதிக்கத் திரியமூடருக்குச்
சித்தப் பிரமைதவிர வேறில்லை
 சித்தர்சொன்ன மறைப்பி தாண்டையே 200



வீரம்பூரம் குருவண்டு நாபியும்
 விதியாகவெ சேர்ந்தரைத் திடக்
காரம்ஏறும் கடிதான நேரமதில்
 காணுமே சதுர்சா மமே
சாரமோடு சவ்வாது தன்னைச்
 சமன்தனி யிடையதாகவே கூட்டிப்
பாருமே அதீத சுண்ணமே
 பகர்ந்தகுரு விதறிந்திடே. 201

**வேறு**

இந்தவகை வந்தகுரு இன்னதென யாரறிவார்
விந்தையின் வேதைதனை விண்ணவரு மெச்சிடுவார்
தந்தையொடு தாயினுக்குத் தானிகர்ப்பரோ தரையில்
தொந்தம் பலகோடிவிதம் தோன்றிடுந் தொடுத்திடே.

**வேறு**

பிந்துவுடன் நாதமது விகசித மதாகத்
தொந்தமுற வந்தவுடல் சொந்தம் நமதாச்சு
அந்தியொடு காலையு மருந்திவரக் காயம்
சுந்திரமும் கூடிடவே சொர்னமதுமாமே. 203

அண்டபகி ரண்டமெலாம் ஆனவோ ருருவாய்க்
கண்டபடி யாகுமிது கனகமிதற் கீடோ
உண்டோ யிதன்பெருமை உம்பரு முரையார்
விண்டவர்கள் கண்டதில்லை மேன்மை பெறலாச்சே. 204

அத்திமுத வீரெறும்பு வானவுயிர் கட்கும்
சத்தியுடன் நாதமின்றிச் சாவது முண்டாச்சு
சுத்தமிகு மிந்தமுறை சொல்லவுஞ் சடலம்
சித்திபெற வுற்றவழி செய்வதறி யாண்டே. 205

சர்க்கரை யிருக்குமிடம் சார்ந்திடு மெறும்பு
பக்குவ மடைந்தவுடன் பக்ஷமிகச் செப்பும்
சற்குரு தமக்குவரச் சஞ்சலமு மில்லை
பொய்க்கதை படிக்குமவர் போகும்வழி நீக்கே. 206

திட்டமுடன் சற்குரு தமக்கு வரச்சித்தி
எட்டது கிடைத்திடும் இதற்குத் தடையில்லை
விட்டகுறை வாய்த்திட விளங்கும் பரிபாஷை
தொட்டகுறை முடிவுவந்து தோன்றுமுட ணுண்டே. 207

முன்னுரைத்த ஞானவெட்டி மூவைந்து நூறும்
பின்னுரைத்த எண்ணூறும் பேணியவை பார்த்து
இன்றுறைத்த வைந்நூறில் ஏற்றபடி தோன்றும்
என்றுறைத்த நூன்முறையில் ஏகுமுனேத் தோர்க்கே. 208

அப்புவென முப்புவென ஆயியவள்பாதம்
செப்பிய வகைப்படிக்குச் சேவை புரிந்திடவே
முப்பிறப்பில் செய்தபாவம் மூளவகை யேது
செப்புபுழுப் போல்மனது செப்பியழிந் தோர்க்கே. 209

வீட்டினிலே நின்றிலகல் விட்டு வெளிமேவிக்
காட்டினிலே சுற்றியதால் காணும் பயன்யாது
நாட்டினிலே பாரையுப்பு நானிலத்தி லுண்டு
பூட்டகமு ணர்ந்துதினம் பொருளெடுப்ப ராண்டே. 210

## வேறு

தொடுகுறி சூதம்விந்து சுரோணிதக் கெந்திநாதம்
விடுகுறி மானிடர்க்கு வீண்வாத மேன்விளம்பும்
படுகுறி ரெண்டும்கூட்டிப் பக்குவம்பெற முடிப்பார்
நடுகுறி விட்டுநீங்கா நாதர்கள் நவின்ருர் பாரே. 211

உப்பினிற் காரசாரம் உவர்நீருமுவர் மண்ணுப்புஞ்
செப்பிய சுக்காஞேடு சிலாக்கியஞ் சாரமாச்சு
ஒப்பிய நூல்களெல்லாம் ஓதிய முப்புவாச்சு
இப்பிறப் பறிவினேர்க்கு இதுதெளிவாச்சு தாண்டே. 212

பற்றற்று நின்றுபார்ப்பார் பரமயோகிகட் கல்லாது
உற்றுற்றுப் பார்த்தாலாமோ ஓலமிட் டழுவார்தாமே
கற்றறிந்தா லும்காணுக் கசடர்கள் முப்பிறப்பில்
உற்றதோர் குறையிருந்தால் உறுதியாய்ப் பலிக்குந்தானே.



விந்துடன் சத்திநாதம் மேலுவர் நீரினுப்பு
சந்துடன் முப்புவாச்சு சலிப்பில்லை மாற்றமில்லை
இந்திரர் முதலாந்தேவர் இனியுனக் கேவல்கேட்பார்
மந்திரமில்லை சொன்னேன் மகத்தான மார்க்கமாண்டே.

பத்தியாய்த் தசமாம்பத்துப் பலிவுள தீக்ஷைசெய்து
உத்தியால் மூன்றும்கூட்டி உறுதியாய் புடந்தான்கோழி
எத்திடச் சுண்ணமாச்சு எழிற்குரு தப்பாதாண்டே
செத்தவர் போற்றிரிந்து செகம்புரந் திருந்திடாயே. 215

வெட்டவெளிபோற் சொன்னேன் வேறில்லை நூல்களாலே
பட்டதொரு பாடுனக்குப் பலனது மென்னுலாச்சு
தொட்டதோர் சரக்குகட்குத் துரிதெம ஞேலையீதால்
இட்டமுட சித்தியெல்லாம் என்னுலே யாச்சுதாண்டே.

## வேறு

முடிப்பதென்ருல் யெளிதல்ல முப்புவொன்றே யிகத்தில்
பிடிப்பதர்க்கு நல்லாசான்பெரிது மநுபோக மொடும்
அடுப்பெறி யோகஞ்செய்கை அணுவளவும் தப்பலாமோ
படிப்பதில் பயனுமில்லை பக்குவம் முன்னுறுபாரே. 217

குருதிடும் மார்க்கத்தோடும் கைமுறை செய்பாகங்கள்
சுருதியோ டுக்தியனு மானமும் சொன்னேன்பண்டு
விரிதிறை யெனவும்ஞான வெட்டியா மூவைந்நூறில்
அரிதிதன் அநுபோகத்தால் ஆமிகத் தெளிவாமீதே. 218

## வாலைரசம்

மதிசூதவிந்து மறைத்தார் மாநிலத்தி லிங்கம்
பதிவானதாகு மதுபரிந் தெடுத்துத் தூள்செய்தே
விதிபோலத் தோண்டிதனில் வெல்லரிய நாறிமூலி
அதிகாரமுடன் கூட்டி அசையாமலறிந்து கொள்ளே. 219

அறிவோடு சீலைமண் ணேழும்செய்து அனலேற்றி
நெறியாகக் காடாக்கினி நிமிடமது சோருமலே
பறியாமல் வாலுகைமேல் பலமாக யேற்றியே
குறியாகச் சாமமொன்று குணமாக எறித்திடாயே. 220

எரித்திடவு மேற்ருேண்டி மேலு மெழிலதாய்ப்
பரித்திடும் கண்ணைப் பளபளப்பாகப் பனிபோல்
தரித்திடும் சூதமது தப்பாது வெகுசுளுவாம்
சரித்ததைப் பேணி எடுத்திடு சாகா தாண்டே, 221

குறிப்பறி யாமற்சடக் கொண்டார் செயரசம்
தெறிப்பேது மாசேதிதில் திணையளவும் தோஷமேது
மறிப்பேது சுத்தியேது மார்க்கமு மினியுமேது
கறிப்பேது கவஊேயது கனகமுமிது தாஞண்டே. 222

தொண்டொரு சட்டியது சோதி மயமதாம்
மண்டபத் தீயிட்டு மாட்டிவிடு தீபத்தால்
விண்டதில்லை யிந்தவழி விட்டிடு நாதத்தைலம்
கண்டதில்லை விந்துவுந்தான் களைக்காது காணினியே. 223

முன்னமும் சொன்னரசம் முந்திடு யிடைக்கிடை
இன்னமும் தைலமது இனியதொரு நாதமும்
பின்னமிலா வெட்டையாம் பிசகாது குழிக்கல்லிற்
பின்னமும் நீர்விடுத்துப் பிரியமோ டரைத்திடாயே. 224

அரைத்திடு நாற்சாமம் அணுவும்கை சளைக்காமல்
உரைத்திடு சுத்தஜலம் உருதிபடப் பின்புநான்கு
கரைத்திடு சாமந்தன்னில் கசிவது மற்றுப்போகும்
விரைத்திடு ரவியில்வைத்து வெளியேநீ எடுத்திடே. 225

அருக்கனைப் போலநிறம் அம்புவியி லதீதவிந்து
சுருக்கமது பற்பமுறை சுருதிகளில் சொன்னதில்லை
கருக்கவழி யாச்சுமுன்னே கண்டதொரு மார்க்கமெல்லாம்
உருக்கமுடன் அகலில் உறுதியாய்ச் சீலைஏழே. 226

ஏழது சீலைசெய்து எழில்படரவியில் வைத்துப்
பாழது போகாமற்ருன் பக்குவமா யெருவும்பத்து
ஊழது ஏதுனக்கு உறுதியாய் பற்பமாச்சு
வாழ்வது வந்ததென்று வைரிபோ விருந்திடாயே. 227



சூதமது பற்பமாஞல் தொட்டது முடியுமற்றும்
வேதையும் கோடாகோடி வெகுசுருக் கிதற்குமுப்பு [தப்
ஓதிடத் தானுமொப்போ உண்மையாய்ச் சொன்னேனிந்
பார்த்தையை உணராமற்ருன் பதர்களு மாஞராண்டே. 228

நீலியுடரசமும் முன்சொலும் பற்பமுங் கூட்டி
வேலியுடன் நின்றரசம் விரிவுறவதையும் கூட்டிச்
சாலவும் மூவிரண்டு சாமமும் கல்லிற்பாய்ச்சிக்
கோலமா யரைத்துக்கொண்டு பின்பு நிம்பழச் சாற்ருலே.

## வேறு

சாற்ருலே ஐந்துசாமம்
சாடிடு வெண்ணை போலே
மாற்ருதே பின்னும் கேளீர்
மகத்தான கையான் சாறு
தூற்ருேடே சேர்த்தும் பின்பு
துகளவே ஐந்து சாமம்
வீற்ருேடே அரைத்துப் போடு
மேலும் வெண் கருவிஞலே. 230

## வேறு

சோதியின் கருவைச் சொல்லவும் எளிதுமாமோ
வாதிகளினி வாரிதுதான் வர்ணம்செகச் சோதியாமே
சாதிசம யங்களற்ற சத்தர்களிதன் பெருமை
பேதியாமலு மறிவார் பிறவாத நிருவிடமே. 231

சாவலின் கருவதென்று சண்டாளர் கொலைக்குள்ளாஞர்
ஆவலின் கருவிதென்று அறியார்கள் அவனியிற்ருன்
ஓவியக் கருவிதற்கு ஊறுசுரோணித நீரென்று
பாவியர் அறியமாட்டார் பகரறு திங்கணீரே. 232

திங்களுமாறு சென்ருல் திகைப்பில்லாக் காடிநீர்தான்
மங்கல்வெண் கருவிரங்கு மகத்தான தாயுமாச்சு
சங்கைகள் வேண்டாமின்னும் சற்குரு வகத்தீசஞர்
எங்களுக்குரைத்ததாலே இயம்பிஞே மிதைவிட்டேகி. 233

விட்டுவெண் கருவினலே விளைந்திடச் சாமமைந்து
மட்டும்நீ அறைத்தெடுத்து வாயகன் றகலில்வைத்துத்
தட்டற ரவியில் வைத்துத் தன்மையாய் அகலால்மூடி
இட்டிடு சீலேயேழும் இன்பமாய்ப் பின்னும்கேளே. 234

### வேறு

பின்னுமொருமுறை குக்குடம் புடமிடப்
பேசவும்தகுமோ வகல நீக்கினல்
இன்னதென் றதன்சோதியைச் செப்பிட
யாருளா ரிப்புவிமிசைச் சூரியன்
தன்னிலு மதன்வண்ணம் கண்கூசிடும்
சற்றுமே தவருதிது பற்பமே
என்னிலத்திலும் ஈடிதற்கே யிலே
இயம்பினே னகத்தீச ரருளினல். 235

அந்தி காலேயுமாக வருந்திநீ
அன்பிேைடு மதஃன யணுகினல்
சொந்தமாகப் புசித்தவர்க்கே தினிச்
சொல்லும் பல்வினையோடும் புகன்றிடும்
பந்தமாகுஞ் சஞ்சித வாகாமியம்
பாரினிற் கடற்புக்கிடும் மாண்டுமே
விந்தினு லுயிருகிய குருவிது
விண்டி லாரிதைக் கண்டவ ராண்டையே. 236

சொல்லும் பயறுடன் பச்சையரிசியும்
தூயவாவினன் பாலுமுட் கொண்டுமே
வெல்லும் மூலத்திருந்து சுகித்திட
வேணவெண் பெரும்சித்தியும் கூடிடும்
கல்லும் கனகமதாகக் கனிந்திடும்
காயமோ மலேபோல வலுத்திடும்
நல்லவனென்று நாட்டி லிருந்துமே
நம்பி யம்பிகையோகம் பயின்றிடே. 237

தென்பொதிகையின் மீதில் விளங்கிடும்
செந்தமிழ் முனியா மகத்தீசனர்
முன்புதானிந்த விந்துவினல் மலம்
மூன்றையும் பொடியாகவு மூதினர்



பின்பெனக் கவரோதிய மார்க்கத்தால்
பெருமையா யன்னைதன்னையும் சேவித்தேன்
நம்பினேர்க்கெந்தன் நூன்முறை யணுவதும்
நாட்டினிற் றவருதையந் தீர்ந்திடே. 238

அன்றவர் செய்தநற் றவத்தாலுமே
அம்பிகை பதமாய்ந்து தெளிந்திட
நன்றெனப் பஞ்சரெத்தின மைந்துநூ
ருகவும் புவிமீதினில் நாட்டினேன்
குன்றமேவிக் குகைப்பி லிருக்கினும்
கூடுமோ குருவன்றியும் குண்டலி
என்றனீஸ்வரி யாளருள் தானுமே
இந்தநூற் குருவாகுந் தெரிந்திடே. 239

### பூநாகச் செம்பு

நாகமென்றது பூமியில் வாழ்ந்திடும்
நல்லவர்க் கதனேகம் கிடைத்திடும்
ஆகமென்ற நான்குமுழ வாழமே
அன்பினலும் சிவந்த நிலந்தனில்
வாகுடன் வரகாதி வைக்கோலதில்
வைத்துமே மண்ணை மூடிட மண்டிலம்
ஆகுமேலும் பிறித்து எடுத்திட
அகப்படுமவை பாண்டத்தில் வைத்திடே. 240

தூயமா நருமாவின்தன் பாலினில்
சுத்தமா மரைத்தாலு மகன்றிடும்
பாயுமே பலஞ்செம் பழத்துமே
பாலினிற் குழம்பாகக் கசிந்திடும்
மாயமா யரைத்தானு மெடுத்துமே
வன்னி யிட்டுமோர் சட்டியில்வைத்துநீ
தீயெரித்திடச் சிவந்திடுமே பினுந்
தீய்ந்துமே கருப்பாகும் கடிதினில். 241

### வேறு

கொண்டொரு அகலில்கொல்லுலை யூதினுல்
மண்டித்தீயிட மாசறும் செம்பதாம்
எண்டிசைதனில் ஈடிதற்க் கேதுகாண்
மண்டலத்தறி மகத்துவ மாகுமே. 242

அற்பமென் றிதனை எண்ணுமலே
உற்பவந்தனில் உண்மையா யோதிய
பற்பந்தன்னில் அரிசிப கிர்ந்துமே
தற்பவங்கெடத் தாக்கிடு செம்பிலே. 243

சற்குரு வகத்தீசன் தயவினுல்
பொய்க்குரு வலசெம்பின் புகலறும்
மெய்க் குருவருள் விளங்குமே
பொற்குவியிது பூதலத்திலே. 244

### வேறு

வானமொடு பூமிதனில் வாய்க்குமோ யிதற்குயிணை
கானமலை மீதினிலும் கனகமிதற் குயினி
ஈனமிலை வாய்த்ததுவும் ஏழெனவே நீயறிந்து
தானமும் வழங்கியே தணிவாக விருந்திடாயே. 245

ஆதிமறை சூதமுடன் ஆகமசு ரோணிதமும்
நீதியுடன் நீறுபட நீட்டிடவும் செம்பதனில்
சோதிமிக வானதிது சொர்னம் வயதேழதுவே
வேதையும் வெகுளளிது வேணும் வழியாண்டே. 246

அண்டர்முனிவரும் காத்திருந்தார் அமுதமிதை உண்டிட
கண்டவ ருரைக்கவில்லை கையழிந்து குலைந்துபோனுர் [வும்
பெண்டிரொடும் வாழ்பவர்க்குப் பேராசையால் மனது
கண்டதினைக் கவர்ந்திடவும் கருத்தறியார்க ளாண்டே. 247

கருத்தறியாமலும் மார்க்கந் துரையறியாமலும் கசடராய்க்
குருத்தெறியாமலும்கோப காமிகளாகவும் குலைந்தனர்காண்
திருத்தமிகும் சூதவிந்துசிவ சத்திநாத கெந்திவாய்நீர்
அருத்தமுணரார் அகில மிசைக்கோடி யாவராண்டே. 248



தொட்டுவிட்டுக் கைவிட்ட கோடி தொல்லுலகில்
சுட்டுவிட்டுக் கைவிட்டவர் கோடி சுருக்கிலுயிர்
விட்டுவிட்டு மடிந்தவர்கோடி மாய்கையிற் குள்ளே
பட்டுவிட்டுப் பதைத்தவர் கோடிபலி யாமலாண்டே. 249

### வேறு

கனகமென் றதனைக் கரியாக்காது
மனமது வசப்பட வழியறியவுமே
தினகரன்போல் செனிக்காம லிருக்கும்
இனமறிந்திடு மார்க்க மெடுத்திடே. 250

### வேறு

மூன்போற் பனிநீரதில் முனைந்துமே பற்பமதை
அன்போ டரைநீலி யவள்சாற்றுலைந்து சாமம்
மின்போல வெளுக்கும் செயமேவுரசமும் சமனிடை
தென்பாக மத்தித் தரைத்திடு திரும்பவுமே. 251

தாக்கிடு கெந்தி சமனிடைதாளக மரைதான்
தூக்கிடு கௌரி பாஷணம் சிலைதொக்கவுமே
போக்கிடு வெள்ளையும் சமன் அரைசாம மைபோல்
ஆக்கிடுகுழிக் கல்லினில் அதைவழித் தெடுத்திடே. 252

ஓங்கிடும் மலைகள்மேலே உயர்கம் பம்போலும்
மூங்கிலென்றும் புகல்வார் மூலமாஞ் சாம்பலுப்பு
வாங்கியொரு பாண்டத் திட்டுவகை பெறவுமே
பாங்குடன் முன்சொன்ன படியொன் றிட்டிடே. 253

உப்பினை யாழம்செய்து உலர்த்தியவதையும் வைத்துத்
தப்பித மின்றிநீயும் தன்மையாய்க் காடாக்கினியால்
ஒப்பியே யாறுசாம மெரித்திட உருவுமாச்சு
இப்படியார் தான்சொல்வார்! இதற்கினி உயிருண்டாக்கே,

### வேறு

உயிர துண்டாக ஓவியமாகப் பின்பு
பயிரது வேலியின் சாறது படியுமாகும்
செயலுட னதிலரைத்துச் செப்பிடும் நீலியின்சார்
அயலுறவைந்துசாம மரைத்துமே மெழுகு மாக்கே. 255

### வேறு

அரைத்திடு அந்தநீர்சுண்ட அழகாகச் சீலைசெய்
குரைத்திடப் புடமதும் குக்கிடம் குளிரவிட்டு
விரைத்திடவ் வோடுநீக்கி வெகுபதன மாகவுந்தான்
பிரித்திடு வாய்பேசாதே பிணிகடல் புக்குந்தானே. 256

பஞ்சபாஷாண பற்பமிது பாரினி லாரறிவார்
மிஞ்சிய நோய்கள்தான் மேலாகா தோடிவிடும்
அஞ்சிட வேண்டாம் அரிசியிடை கொடுத்தால்
தஞ்சமென்றுனே அரசர் தாள்பணிவா ராண்டே. 257

குட்டமோடு ஈளை யிருமல் குடல்வாதம்
நட்டமுறு மெய்வலிப்பு நசிவு மிசிவும்போம்
துட்டமெனும் சூலை கிரந்தி தொலைந்தோடும்
சட்டமதும் சொர்னமெனத் தான்வலுத் தேறுமே. 258

### வேறு

மேனியது சொர்னமென வேதிகமு மண்டலம்
தானுமுண வாசியது தணியுமேல் வாங்காது
ஏனுமினி வையகத் திருந்து பலவாக
ஊன யுடலாலு முயிரழிய வாண்டே. 259

### வேறு

உற்பவக் கருத் தொண் ணூற் ருறினல்
பிற்பவத் துறும் பீழைக் கிடையாகும்
விற்புரு வத்திடை வேதை விசித்திரங்கோடி
அற்ப வித்தையிலை யாகுமறி யாரே. 260



### வேறு

வழலையின்ன தென் றறியார் மாநிலமுழுதும் சுற்றினர்
அழலதில் உப்பையிட்டு அகங்குலைந்து வெம்பினர்கள்
விழலுக் கிறைத்தநீரென வெந்துசாம்ப லாய்க்கண்டார்
மழலையாமென் றுய் மகத்துவ முணர்ந்தார்க் கதுவாகுமே.

### கருவங்கச் சுண்ணம்

வங்கமது வழியாய் மடிந்தால் மாந்தர்க்கதுதான்
தங்கமது வாகும்துறை யார்கண்டார் தரணிதனில்
சிங்கமது ராசயோகம் செய்யும் திறமையதனுல்
பங்கமுறுது பலிதமிதன் வேதையதிகம் பார்த்திடே 262

உலகுதனில் வங்கந்தனே ஓ சினர்பெரியோர் உடலுக்காக
இலகுமதுதன்பெருமை இயம்பிடவெகுகடினம் எண்ணுவா
விலகுமினிச் சலனம் ஐயமில்லைவியப் பொன்றுமில்லை [யே
அலகைதனைப்போல்திரிந்தாலார்செப்புவாரறிந்திடாண்டே

### வேறு

சுத்தியேது வங்கமிதற்குச் சுத்தசலமது
தனிற் றூய்மை யாகும்
வித்தையோ தினேன் பன்னிரண்டு
சாமம் விகசிதமதாக வைத்து
நத்தியேயுருக்கி யெருக்கன் பாலில்
நலமுடன் தோய்ந்தெடுக்கச்
சித்தியாகும் இனிச்சுத்தி வேறில்லை
தெளிந் திடாண் டையே. 264

### வேறு

உருக்கியேநற் சுண்ணமும் உறுதியாய்ப்
பெருக்கினுற் கழஞ்சி இடைபேணியே
தருக்கினு லதன்வீறு சனேத்துமே
அருக்கன் போலவு மாகுமறிந்திடே. 265

கலக்க மேனினி வங்கமும் கட்டிடும்
துலக்க மேவெட்டை யாகவும் தோன்றிடும்
நிலைக்க வேதுகை தன்னினீ ரூட்டவே
வலுக்கு மேபொடியாக மடிந் திடும். 266

மடித்துமே குகை மாறி மறுதரம்
பொடித்துமே சுத்த கெங்கையைப் போற்றியே
விடுத்துமே யொரு சாமம் வியப்புடன்
கடுத்துமே யரைப் பாய்நீ கலுவத்தே. 267

கலுவத்தே யொரு சாமம் கடிதினில்
அலுவல் யாதுமே அன்றி அரைத்துமே
நலுவத்தால் ரவி நாட்ட த்தில் வைத்திட
உலகத் தார்க்கிது உற்ற முறையிதே. 268

முறைய தாய்மாது நாத முணர்ந்துநீ
நிறைவ தாகக்க முஞ்சி நீரூட்டி டக்
குறவை தேது குருவிதற் கானதோர்
துறையி னுலினித் துப்புற வாகுமே. 269

ஆகும் வங்கம் அதனை யரைத்துமே
வேகும் பரிதியாம் வெய்ய லுலர்த்தியே
வேகமாய்க் கெச புடத்தில் வெளுத்திடும்
யூகமா ரறிவார்க ளுணர்ந் திடே. 270

உணர்ந்துமே மறுதரமும் உறுதியாய்த்
துணிந்துமே கரிசாலைச் சுருக்கிடப்
பணிந்துமே சீலைபாங்குடன் செய்திட
இணங்குமே யினிச்சேவற் புடமிடே. 271

வேறு

குளிர்ந்ததும் பரிந்தெடுத்துக் குறிப்பதாய்
விளங்குமே கோடிசூரியன் வெம்மைபோற்
பளிங்குதா னிதற்குப் பாரில் நிகராகுமோ
உளங்குளிர்ந்திடும் உண்மையீ தாண்டையே. 272



வேறு

வங்கமது தரணிதனில் செய்ய வென்ருல்
வாதிகட்காகாது மகத்தான கடினமது
பங்கமடைந்தார் பலபேர் வழலை யென்றிருந்தும்
பரிபக்குவ முணராது பலிக்காமலும்
சங்கை யறுமிந்தமுறை சாற்றினுர் எவருமில்லை
சலுதியாய் யேக்கமது தானுமின்றித்
துங்கமுறும் வங்கமதைத் தொட்டு நோய்கள்
துலைதூர மோடிக்கடல் புக்கிவிடு மாண்டே. 273

வேறு

காலை யொடுமாலை இருவேளை கதியெண்ணி
வாலை குண்டலியபிராமி மலர்த்தாள் தனைப்பணிந்து
ஞாலமதில் நோயாளிகட் கீய்ந்திடு நயமதாய்ப் பயர்தான்
ஓலமிடு நோய்கடாம் உரைத்தேன் அறியிதாண்டே. 274

ஓடிடும் சூலைக்கிரந்தி உற்றிடுமாந்த மோரெட்டும்
சாடிடும் வாய்வு விக்கல் சன்னி கக்கலொடு சூதகம்
நாடிடும் சேத்தும நோய்கள் நல்லரவெனக்கண்டுசாகரம்
தேடிடும் வங்கபற்பம் சிவபற்பமிதனை யறிந்திடே. 275

குன்மம் வச்சிரகண்டம் கொடிய மகோதரமும்
அன்னத்துவேஷமும் அரியமேக மிருபத்தொன்றும்
பன்மையாம் காசமும் குலைப்பும்படர் வெள்ளைக்குட்டமும்
நன்மையாம் நாள் மூன்றருந்த நலிவுற்றிடுமே. 276

தக்கதொரு வநுபானத் துடனருந்திடச் சண்டனில்லை
தொக்கதாம் பிணிகளோடும் துலைதூரம் துயர்கள் நீங்கும்
மிக்கவுமுண்டால் உடல் கருக்கும மேனியுந் தங்கமது
முக்கிய மிதையறிந்து மூன்றுநாளுண்ண முனைந்திடே.

எடுத்திடு பணவிடை இனிமையாய்ச் சூதமேல்
தொடுத்திட ரசிதமாம் சுருக்குவெகு கவனமாய்
நடத்திட வழியறிந்தால் நாட்டினில் துக்கமில்லை
கெடுத்திடு மாசை நீக்கிக் கிருபை பெற்றிருந்திடாயே, 27

உள்ளிய ரசிதந் தன்னை உருக்கியே சமனெடுத்து
மெள்ளவும் பரியிலீய்ந்தால் வேதையு மெண்மாற்ருகும்
கள்ளமு மொன்றுமில்லை கடிதிது கருத்தில் கொண்டால்
சள்ளையுமில்லை சொன்னேன் சாஸ்திர நுட்பமாண்டே

**வேறு**

உறுதியா யகத்தீசர் உரைத்திட்ட
சருதிபோல் முறைசொல்லவும் கூடுமோ
கருதியேபடி காத்திருந் தாலுமே
அரிது இம்முறை யாருமறிவாரோ. 280

பொய்க்காதன் மடவார் போகத்தில்
மொய்க்கா மலும் மோனம தாகவும்
கைக்கானபடி கனகஞ்செய் துண்டுமே
மெய்க்காய சித்தி விரைந்திடே. 281

வன்னியும் வாயுவு மப்புவும் வாய்த்துமே
நன்னியம் பெற நன்மையாய்க் கூடினல்
இன்னிலந் தனில்முப்பு வென்ருச்சுதே
பின்னுமற்றும் பிறப்பகற் றும்மிதே. 282

யோகிகட்கிது மண்டலம் உண்டிடத்
தேகமும் பிலமாக வலுத்திடும்
ரோகியென்று யிரப்பவர்க் கீந்துமே
போகம் நீக்கிப் பொருளை யறிந்திடே. 283

சன்மமே தினிச்சஞ்சல மில்லைகாண்
கன்மமேது கடல்புக்கி யோடிடும்
இம்மையோக மறுமை யிழித்திடாத்
தன்மையே வந்துதான் சித்தியாகுமே. 284

உண்மை ஞானவெட்டி உரைத்தநூல்
திண்மை தானறிந்தே குறிகண்டிடில்
பெண்மை யேதுபிறழா துடற்குளே
அண்மையா மம்மை அருளும் விளங்குமே. 285



**வேறு**

சொல்லிய முனியோடுந் துரிதமா யமுரிச்சுண்ணம்
வல்லமையுடனே சூதம் கழஞ்சிட வடமாயின்னும்
மெல்லவே விடுகல்லுப்புஞ் சாரமும் பதனமாக
நல்லதா முப்புவுவந்து நிற்கும் நானிலத்திலாண்டே. 286

உத்தமமாய் ஈறெட்டுச் சாமமரை இருகவும்
வித்தகமாய் மெழுகுபோல் வருமளவும் விறைவினிலே
நத்தியே விடுகெந்தித் தைலம் நயம்படப்பின்பு
சித்தியாகு மிதுரெண்டு சாமமரை திடமுடனே. 287

திடம்பெறவும் ரெண்டு சாமம் திரும்பவுமரை
படம்ரவஞ் சீறும்பார் கெந்தித்தைலப் பான்மையினல்
அடம்படவு மினிவிடு மேனிச்சார் அதுவும் நான்கே
உடன்படவும் சாமமரை உறுதியினி யாண்டையே. 288

தொல்லை வராமலு மரைத்துச் சுருக்கிவிடு கவசம்
அல்லலேல்துயினி அருணன் முகம்பட வைத்து
மெல்லவுமெடுத்துச் சில்லிட்டு மேல்மூடிச் சீலைசெய்து
வல்லமையாக மணற்கொட்டி எரித்திடே. 289

**வேறு**

வன்னியிட்டு யெறித்திட மேலுமே
அந்நிறமும் முருக்கன் மலரது
என்ன நாளுமிலங்கு மிமையவர்
நன்னயமுட னுடுவ ரித்தையே. 290

**வேறு**

செந்தூரமிது செயசூதரசகெந்தி சேர்க்கையால்
விந்தூறு முடற்குருதி விளுடிதனில் நாடிமிசை
வந்தூறும் காயம் வலுக்கும் கூற்றுவனுங்
நொந்தோடுவ னித்தைநுகர்ந் திருந்தாலுமே. 291

ஆச்சுது செந்தூர மரிதாகு மிதிற்பணவிடை
பாய்ச்சிட ரசிதம்கனகம் பார்வேதையுஞ் சுலபம்
ஆச்சரிய மாற்றுமெட்டு அவனியில் கண்டவுடன்
கூச்சலிடு வகத்தீசர் குருவருள் வாய்த்ததென்றே. 292

## வெண்கார வைப்பு

தரைக்குள் வெண்காரவைப்பைப் பற்றியார் சடுதியாக
உரைப்பதற் கந்தமார்க்கம் உள்ளமும் கபடமில்லை
தெரிப்படவும் காரைவைப்புத் தெரியாமல் வேதையாமோ
சரிப்படாது முறைதெரிந்து சங்கையற் றிருந்திடே. 293

கல்லுப்புடன் பூநீரெண்டும் கடிதினி லொன்றதாய்
மெல்லவுளுத் தமாவுடன் மேன்மையா மணிவித்ததும்
வல்லமை யாங்கள்ளி வளஞ்சேர் பாலுமொன்றுய்த் [யே.
தொல்லேயே யறச்சீலேயதும் தொக்கவுமூட்டிடு வாண்டை.

வைத்திடுமண்டலம் குழிவெட்டி வகையாய்ப் பாண்டம்
நைத்திடும் பூமிதனில் நாடிப்பின்னெடுக்க நவின்றிடும்
பொய்த்திடுமோ பாருமினிப் பலகைபோல் நின்றிடும்
பைத்தியருக்கோ இதுசொன்னேன் பார்தனில்சூக்ஷ்மமிதே.

பிசகாது யிந்தமுறை பிரியமுட னறிந்தபேர்க்கு
நிசமாகும் வேதைதான் நீடியவெண் காரவைப்பால்
ரசவாத மோடுநல ராஜயோக மதுதான் சித்தி
உசவாத வீணருக்கு உதவாது யிதுதானுண்டே. 296

### வேறு

சொகை நீரினிற் சுத்தியா முப்பதும்
ஆகுமென்று மநேகர் அறிவாரோ
மேகநீரென்று வீணில் விளம்புவார்
ஏகநீரன்னே நீரது வென்றுமே. 297

என்றுமே தசதீக்ஷை இசைந்துமே
நன்றுமே பெறநாட்டிடிற் கற்பம்
ஒன்றுமே உலகற்கது முப்புவாம்
சென்று பார்த்தவர் சேதியறிவர்காண். 298



## தொந்த வேதை

### வேறு

தாளகந்தனைத் தாக்கிடு சுருக்கினிற் சட்டியில்
மாளவும் சுத்தகெங்கையை மாட்டிடு சுருக்குமே
மீளவும் தீபந்தன்னில் மெதுவாய் விடுத்திடு
வேளேயுமொரு சாமந்தன்னில் வெம்பிக் கட்டுமே. 299

இன்பமொடு சற்குரு இசைந்திடில் யாவருக்கும்
அன்பினுல் வேதை அத்துடன் யோகமாகு மம்புவியில்
நம்பியே காமக்குரோதலோப நாசமத மோக மாச்சரியம்
வெம்பியே விட்டால் மெய்க்குரு விளங்குமுண்மையே.

காரமென்ற பூரமது பலந்தானென்று கண்டுமே
சாரமென்ற சுத்தஜலம் சாடி விடுதிரி சாமமும்
வீரமுட னிரவியிலிட் டதைவழித்து வெகுபதனம்
தீரமுடன் வெண்கருவால் திரும்பியாட்டே. 301

ஆட்டியே வெண்கருவும் அதைமென்மேல் விடுவழகாய்ச்
சூட்டியே லிங்கமதைத் துரிதமாய்ச் சேர்த்தரைத்துமே
நீட்டிடு முப்புக்கழஞ்சி யிடைநிச்சயமா யகலிலிட்டுச்சீலே
ஊட்டிடுவா யேழுமுறை உறுதியாய்ப் புடமுமாண்டே.

குக்கிடபுட மதுகொண்டு குளிர்ந்த பின்னெடு குவல யத்தில், மிக்கவும் இதையாரறிவார் விவேகிகளுணர்வார் வேதையாகும், ஒக்கமும் செந்தூரம் விட்டாட்டு வெண் கரு வொல்லேயில், தக்கவும் தரமேழுபுடம் குக்கிடம் தன் மையாண்டே. 303

லிங்கமொடுபூரம் இரண்டெனி லிலகும் சூதஞ்
சிங்கி செந்தூரமும் தொந்தமிது செய்வது வெகுவேதை
பங்கமேது பாரினிற் பார்த்தெடு சுயம்புவாகும்
வங்கமீதினில் தாக்கிது வன்மையாய் உலேயிலே, 304

உருக்கு முகந்தனி லீந்திட உடனே கண்விட்டாடும்
தருக்குமில்லே முன்சொன்ன முப்புவிடை தான்கழஞ்சி
பெருக்கவும் நீதாக்கிடு பேதகமில்லே வங்கமும்
சுருக்கினில் ரசிதம் சோதிமயம் சுயம்பிரகாசமே. 305

சோதிமயரசிதம் வங்கம் தொடுமுப்பு விஞல்
பேதகமாகுமிது பேசரிது பெருமையா ரறிவார்
வாதிகள் கூடிமயங்கிஞர் வாயாறச் சொன்னேன்
நீதியுடன் ரசிதம் தன்ஞெடு நேர்மையிதே. 306

கொண்டிடுரசிதம் சமனிடை குலவியே செந்தூரம்
மண்டிடு துருத்தியில் மாட்டிடு குகையிற்ருனும்
கண்டிடு சாமந்தன்னிற் கனகம் வயதுபத்தரை
விண்டவர்யார் என்போல் வெகுசுலபமீதாண்டே. 307

## வேறு

இந்தப்பாகம் அறிந்தவர்க்கே தினி
முந்தும் பாவவினையும் மூளைத்திடா
தொந்திப் பானவறுமை தொலைந்திடும்
சந்திப்பா மகத்தீசன் தயவிஞல். 308

## வேறு

கானகத்தி னுப்பதனைக் கண்டறிந்து காரமெனும்
பானகத்திஞேடு சுத்தி பாலித்தால்—ஊனகத்தில்
மாசில்லைமாற்று மருளில்லை ஈதறிந்து
ஊசரத்தைக் கண்டு உணர். 309

ஈரைந்து தீக்ஷை எழிலாகச் சுன்னமதில்
சாரந்தனை யுணர்ந்து சாதித்து—நீரிந்த
மண்டலத்தில் மாயோகம் மாசித்தி வாய்த்திடவும்
கண்டு கடைத்தேறக் கருது. 310

## வேறு

சடமிருந்தா லன்ருேசாதிக் கலாம்யோகம்
திடமிருந்தா லன்ருேசித்திக் கும்வாசி
விடமானவரவம் விட்டோட்ட வேணும்
உடல்போஞ லுனக்கு உறுதியே தாண்டையே. 311



குடமது உடைந்துபோஞற் கூடு மாகாசம்போலத்
திடமது குறைந்ததாஞல் சிலேத்தும மீறிப்போகும்
நடமிடும் குண்டலியாம் நாரியவள் பாதம்நம்பிச்
சட்டம்இது இறுகுமாறு சாதித்திடு நாளுமாண்டே. 312

மனைவிமக்களோடு மண்ணுசையால் மயங்கி
வினைகளைமேலும் கொள்ளும் விவகாரங் கழன்றுவிட்டுப்
புனைந்திருந்திடாது தனித்துப்புதுமையாய்ப் பதுமையென்
தனியதா யிருந்து அந்தி சந்தியும் சாதியாண்டே. [னத்

துறவியெனவும்வேடம் துலங்கவும் வழக்குப்பேசி
மறலிவாய்க் குள்ளேசிக்கி மடிவார்கள் கோடாகோடி
இறையவ ளடிமலர் ஏத்திடாப்பதர்கள் தமக்குப்
பிறவியும் கோடாகோடி பிசகில்லை அறிந்திடாயே. 314

முப்பாவ தென்னமுடிந்த பேர்க்கன்ருே மொழிந்தேன்
துப்பாளி யறிவான் தொடர்மலமாய்கைக் குள்ளாய்
இப்பாரதனிற் பொய்வேடமிட்டுப் பொருள்பறிக்கும்
தப்பானவர்க் கில்லையது சண்டாளர்க் காகாதாண்டே. 315

அட்டாங்க யோகம் அதுபலித்திட அருளும்முத்தி
தொட்டாங்கு நின்று துணையா யியம நியமாசனம்
பட்டாங்கி லுள்ளபடி யறிந்து பாலிக்காதார்க்கு
முட்டாகும் முப்புமுடியாது மொழிந்தேனிது சத்தியமே.

இயமமொடு நியமாதிகளை நீக்கி இட்டப்படிகள்ளும்
வயமதாய்க் கஞ்சா வபிஞெடு வனமூலி தனையுமுண்டு
நயம்பேசும் சண்டாளர் நாட்டினி லறியாவண்ணம்
பயமாகச் சொன்னேன் பரிபாஷை யுணர்வார் பக்குவரே.

## வேறு

பக்குவிக ளறிவார் சற்
குருவால் பார் பயமேதுமில்லை
நற்கரு மாதிகளை நீக்கி
நாட்டி லலையு முலுத்த ரறியார்

தற்குறியாகத் தடித் தனமாய்
வாய்வாதம் பேசும் சழக்கர்கள் தாம்
மக்குவார் வாதம் செய்து
மண்ணுக மண்ணேடு மடிந்தே. 318

வேறு

இட்டனர் சித்தர்கள்தாம் சாபம்இயைபிலா மாந்தருக்குத்
தொட்டதும் கருக்கும் அன்றித் துலேதூரம் பரக்குமென்று
விட்ட குறைவந்தால்வாய்க்கும் வேணும்சாந்தமுமன்புமிது
மட்டுடன் வாய்மைதூய்மை வள்ளன்மை அருளுந்தானே.

அண்டபிண்ட சராசரம் அனைத்தையும் ஆதியுப்பாற்
கண்டுகொண் டேனென் குருகருது மகத்தீசனருள்
உண்டுஅதன்சூக்ஷமம் ஓதினேன் ஞானவெட்டி நூலதில்
மண்டலத்தில்முப்பு வழிமார்க்கமும் தெளிந்திடே. 320

சொன்னதொரு வுப்பது சுயம்பிரகாச நீரதில்சுத்தி
பின்னமேது பிசகாதே முறைபிறழாதுமே முடித்துத்
தன்னையேயறியத் தணித்துத் தணிவதாய் கற்பமுண்டு
அன்னை யபிராமி யவளருள் நாடி அமர்ந்திடே. 321

விந்துவுடன் நாதம்கூடி விளைவான திந்தவுடல்
அந்தத் தந்திரந் தானறிந்தால் அறிவுண்டாச்சு
தொந்தமே செய்ரசசூத விந்துசுத்த சத்திநாதம்
கெந்தியொடு மென்போற் கிருபையால்சொல்வராண்டே.

தொந்திடச் சுருதியுடன் யுக்திதோண வேண்டும்
தந்திரத்தினை யறிந்தவர்க்குச் சடலமது வலுத்துப்போகும்
அந்தரத்தினில் நின்றிலகலாகும் ககனவெளியிலதனல்
வந்துசித்தித்திடும் வண்மையாம் ரசகுளிகையாலே. 323

துருசுநீறு - வேறு

தூக்கிடு ரசபூரவீரமதில் துணிவதாகத்
தூக்கிடு சுத்தகெங்கை துரிதமாய்ப்
போக்கிடு குழிக்கல்லில் புதுமையாய்
நீக்கிடு மயனமாய் நெறியிதே. 324



நெறியதாய் வருமெழுகை நீயுமே
குறியதாய்த் துரிசதைக் கொண்டுதான்
தறியதாய்க் கவசமும் சாடிடு
சிறியதா யிரண்டெரு தேர்ந்திடே. 325

தேர்ந்தெடுத்திடு திரமாய்த் துரிசதும்
சார்ந்திடும் சுயச்சுண்ணமா மிதனுல்
ஆர்ந்திடும்ரசம் ஆடிடும் பிட்டதாய்ச்
சார்ந்திடு மிந்தச் சூக்ஷமந் தன்னினுல் 326

சூதமணி

சொல்லொணு ரசசூதவிந்து தொகுத்திடு சட்டியில்
வெல்லொணுத் துரிசதின் சுண்ணமே யதில்மேவிடு
மெல்லவும் வன்னியிட்டு மென்மையாக வெரித்திடு
வல்லராசனும் சிறைவசமதாகு மாண்டையே. 327

சூதராசன் சிறைபட்டுப் பிட்டென சுழன்றுன்
வாதராஜன் வகையான தால்மத்தை வகிர்ந்துந்
தீதுமேயறத் தீபமேயிடு திரும்பவும் செம்மையாய்ப்
பூதமேயென வெண்ணை போல் புரண்டிடு மாண்டே. 328

வேறு

வாய்த்திடு மத்தை தன்னில் வளமதாய்த்
தீய்த்திடு தீபத்தால் திரும்பவும் தசமுறை
சாய்த்திடு பொன்மூலிச் சாரமதில் பின்புமே
பாய்த்திடு மணிபோ லாச்சு பாரினியாண்டே. 329

பின்புநீ யெடுத்தொரு பீங்கானி லிட்டுமே
அன்பதாய்க் கையா னதன் சாற்றினுல்
தென்பதாய்க் கொடுப்பை சுருக்குத் தீவரத்திட
இன்பதாய்ச் சாரணை ஏற்றிட ஓடுமே. 330

ஓடுமே ககனமிசை உறுதியாய் யோசனைதான்
நீடுமே அண்டரண்ட மெல்லாம் நிலையதாய்த்
தேடுமே யதைவிடா மலும்தீப தூபமிட்டுப்
போடுமே யிதனுற் புனிதராகுவர் காணுண்டே. 331

சாதித்திடும் மோகிகட்குத் தானதுந் துலங்கும்
வாதித்ததி ஞற்பயனும் வழங்காது மார்க்கம்
சோதித்துமே சூதமணி சூடியே விண்சாரி
பாதித்திடு வார்பரம சற்குரு பரனுலே. 332

### வேறு

சோதித் துரிசத்தின் சுண்ணத்தால் சூதமும்
ஆதியொளி மணியு மாந்தானே—சேதி
அறிந்தார் முடிப்பார் அறியார் மதிமயங்கி
வெறியார்போற் றுனலேவார் வீண். 333

### தாளக நீறு

புகலுகிறேன் தாளக நீறுபுனித முடன்
அகலுமே நோய்கள் அணுவும் கைதப்பிடா
துகளு மாதிமூலியினுல் தோன்று முடலும்
சகலமும் வலுக்கும் சந்தேகமில்லை யாண்டே. 334

அமுரியினுற் றுளகத்தை அரைத்து மைபோல்
குமுறிவிடச் சுண்ணமதிற் கொஞ்சமிடு நீதான்
அமைவளவும் வட்டோடு அடுப்பிற் கேற்றி
சமைவுபெற வன்னியிட்டுச் சமைத்திடு மாண்டே. 335

அனலிடவும் அதுகருத்து நீர்வர ண்டுமே
புனலெனவும் போமதற்கும் புதிதாம் வாழ்வு
கனகமுட னதன் நிரமும் கருத்துக் காணும்
இனமுடன் பின்னதை வழித்துக் குழிக்கவிடே. 336

இட்டுமே குருமூலி இதனுற் சாமம்
மட்டேமே மயனம தாகவும் பதமாய்
விட்டுமே யரைத்து வில்லைசெய் ரவியில்
பட்டுமே புடம்குக்கிடம் பிசகாதிதே 337

பிணமதாகிலும் வாய்திறந்து பேசுமொரு நாழிகையேனும்
குணமதாகும் கொடுநோய் களுக்குக்காலன் குவலயந்தன்
மணமதாகு மகாகேசரி மெழுகிதன் மகத்துவத்தினை [னில்
உண்விவ காரமறும் உந்திக்கமலச் சுழிலேஉற்பவமே, 338



### வேறு - மகாகேசரி மெழுகு

பாஷாண மென்னப் பளிங்குபூரம் வீரம்பரிவுறவும்
வேஷாண மேதுகௌரி மனேசிலை வெள்வங்கம் நிமினை
ஆஷாட பூதிபோலலே யாமலும்தாம்பிர மயம்வங்கம்
காஷாய மான குடவன் லிங்கமும் காணுகமதே. 339

காரமெனும் சிங்கிரசிதம் வெங்கலம் காணரிதாகும்
தாரமுடன் ரசசூதம் சத்திநாதம்கெந்தி யிவை சமனும்
நீரதுதான் சுத்தஜலம் காரசாரம் நேர்மையாய்க் கரைத்துத்
தீரமுடன் லோகங்களவை தூளதாய்ச் சிதைத்திடாயே.

சூதரசமதனைத் தொந்திகெந்தி சுகமாம் சத்தியகனல்
ஆதிநவபாஷாணமும் அவைதான் பொடி அணுவும் தவறி
ஏதமேதினிஎங்குமம்புவி மிசை இனிக்காரசாரத்தினல்[டாது
நாதமோடு குமுறவடுப்பேற்றி நளினமா யெரித்திடாயே.

காலைமாலை யிந்தப்படி சுண்டிடவும் கடினமதமாய்
வேலையாகும் வெதவிகசிதம் மேன்மையிதை யார்காண்பார்
சேலைமூடு மாதராசை செகநலத்தற்று வாலைதிருவருட்
பாலையுண்டு காலைமாலை பணிந்தவணி நந்திடாண்டே.

பாச்சிடு செங்குமரி நீர்ப்பனிபோலு மாதவிடாய்நீரதே,
கூச்சலிடும் சரக்கெல்லாம் கூவென்றலறிக் கட்டும் மெழுக
தாய்த், தீச்சலிடாம லும்பதனமாய் நீர்சுண்டு மட்டும் தீயு
மிட்டு, ஆச்சுதென்று அம்மைதுண்டலி அடிவணங்கி
யாறவிடே. 343

எடுத்திடு நற்குகையில் இன்னலறச் செம்பிட்டு ருகிய
பின்பு, கொடுத்திடு பச்சைப்பயறளவு குலவும்துரி சகன்று
போம், மடித்திடு மதன்களிம்பு மாசறும் மாவேதை யிது
யார்தான், தொடுப்பாரிவ் வையகத்தில் துரிதமாம் வேதை
யீதாண்டையே. 344

பேதமற்று விலங்குமெய்ஞ் ஞானப்பெரி யோர்கள்தாம்
ஏதமுற்று வாடாமலும் இரந்துண்ணு மலும்
வாதமுற்று விற்றுவழி பார்த்திருப்பர் வகையிதுகாண்
தீதகற்று மகாகேசரி மெழுகுசெகதல மீதிலறிந்திடே. 345

பூமிதனி லின்னமும் புகன்றிடும் பித்தவாத சிலேத்துமம்
காமியற்கு மேதரிதுகாண் கடிதினில் பயறதன் வீதமாய்
வாமியபிராமி யவளடிமலர் வணங்கியுஞ் சிரமதில்
தாமிதன் பெருமை யுணரத்தாக்கிடச் சந்தேகமில்லைதானே.

வேறு

செத்தவரு மெழுந்தொரு கணமேனும்
சேர்ந்துநின் றவரை
நத்தியுமுரைப்பர் நடுக்கமுருர் நாதனுயிர்
விடுக்குமட்டும்
பித்தசன்னியும் துலைதூரம் போகும் பேசாது
கடல்புக்கிடும்
முத்தணி மாதர்முலைப் பாலில்முனைந்து
பயிறளவீயவே. 347

இலங்கு மிளகுடன் முக்கடுவும் சமனதா யிசைத்த ரைத்து, நலங்கிளர் நல்லாவின் பாலுடன் கூட்டியே நயந்துமேவிச், சலங்குமுறும் மேகம்பதினெட்டும் சார்ந் திட்ட பிணிகளுக்குந், துலங்கிடவும் பயறளவு நீட்டத் தோன்ரு தோடுமேகமே. 348

வேறு

கருத்திடுங் கையானுடன் சங்கன்கருந்துளசி
யிவையின்சாற்றில்
கருத்துடனும் பயறளவு மகாகேசரி
மகராஜமெழு கிழைத்துப் புவியில்
பொருத்தி யருந்திடவும் கொடுபோகும்
காமாலை சோகைபலவும்
வருத்தமினி யேன்உலகுள வன்பிணியெலாம்
நாசமாமே. 349

சுக்குடன் கஸ்தூரிமஞ்சள் கடுக்காயிவை பொடிக்க வளமாய்த், தொக்கவும் யிடுசமனுய்த்தொந்தியதில் மெழுகு பயறது, விக்கலுடன் மேவுவிப்புருதி விஷப்பாண்டு விண் டிட்டேன், தக்குமோ சடலமுயிர் பிரியாதுதரை தனிலாச் சரியமாண்டே. 350



வேறு

துரிதமுடன் காயசித்தி தோன்றுமுடல் வலுக்கும்
பெரிதரிதென வென்றும் பிசகாது வாசிகட்டும்
அரிதுதான் மகாகேசரி அதன்மகிமை யாரறிவார்
விரிதிரைப் புவிதனில் வீணர்க்குதவா திதுவாண்டே. 351

தீபகுண்டலி மூலாதாரத் திருந்துபொழிந் திடுமமுதம்
ஆபத்தில்லை யினியுடற்கிதை யநுதினமு முண்டுவரத்
தாபமேது வையகத்தில் சாவேது தகமையோடுங்
கோபமோடு மகங்காரம் கொள்ளி யிட்டுக்கட்டிடே. 352

தப்புமே உப்புறைப்பும் புளிப்புத்தள் ளாதிருந்து
ஒப்புமாத ரல்குல்உரக படந்தனில் நிலைத்துச்
செப்பும் நோய்கள்பலவும் மென்மேற் பெருகவுமாசை
கைப்பும் விடாதவர்க்குக் கிருபையே தாண்டே. 553

சீலமாய் வாசிஉனக்கு ளடங்கச் சித்தி யாம்காயம்
வாலிபனுய் வாழ்வாய் வருவார்க ளுன்பாற்சித்தர்
தூலமும் கடந்துசூக்ஷம தேகியாய்க் ககனமேவி
ஞாலமீதிருக்க ஞாயமிது நல்ல வனு யிருந்திடாயே. 354

சனகாதிகள் முன்கண்ட சச்சிதானந்த ரூபகற்பம்
கனகமதாகும் காயம்கல்லுடன் வாள் வில்லடி யேருது
வினவுகலை யாதியிடைபின் னிரண்டும்விர வியேமூலக்
கனலைமேவும் சுழினைகாணும் கபாடத் திறந்தே. 355

வேறு

காலையொடு மாலைகடுகளவும் பிசகாமலும்
பயறதுதான்
வாலையவள் பாதம்பணிந்து வாசியுடன்
கூட்டியுண்ணவும்
சீலமுடனேடும் தொல்வினைத் தோஷம்
பறக்கும் திகைப்பில்லை
பாலனென்ன வானம்பூமி யிரண்டிலும்
வாழ்வாராண்டையே. 356

## வேறு

காயம் வலுத்திடும் கவலைக் கடல்மூடும்
ஆயுளிவ னுக்குமிது வென்னலு மாகாதே
ஓயும் மனேவிருத்தி உடலில் குருதிவாயும்
மாயும் வகைக்கிதை மாற்றயா றறிவாரே. 357

காமப் பாலுண்டுங் கருத்தை யழிக்காது
வாமப் பாலமுரி வழங்கிவைய கந்தனிலே
நேமகத் தோடுநிட்டை தனிலிரு ந்திடில்
ஏமனேது இனியிழுக் கேது ஆண்டையே. 358

ஒத்துப் பாய்ந்திடும் உலகில் திரிதரும்
பத்துத் தசநாடியும் படிந்து ஒருமித்துச்
சுத்த சிவா நந்த சூக்ஷமது கையுறும்
வித்தை பஞ்சரெத்தின மேன்மை யறிந்திடே 359

அண்ட மொடுபிண்ட மாதார வாசியதால்
விண்டிடவு மாகாதிதன் மேன்மை பூதலத்தில்
கண்டதுவும் காயமெனும் கற்பத்து றுதியதால்
பண்டு செய்தபாக்கியம் பலிதமு மிதாண்டே. 360

கற்பமது கலந்துதின முண்டிடக் கலக்கமுடன்
முற்படு மரவதுங் கடித்தாலு விஷமேருது
சொற்பமாம் பலவிஷமும் துயர்தராது தோன்றும்
அற்பமா ந்தருடன் கூடியழி யாமலுமாண்டே. 361

## சூத நீறு

செயரச சூதமொரு கலுவத்திட் டுச்சிறப்புடன்
நயமெனு மூமிநீர் சுத்தசலம் நாட்டிமத்தித்துப்
பயமுடன் தகரைப்பனிச் சாறலாவி யறிந்துமினிச்
செயமிதி லதிசூக்ஷமம் செந்தியி லெரித்திடே. 362

எரித்திட வும்பாலாடை போலுமினி மையாகத்
தரித்திடு மேல்வழித்துத் தனித்துமே ரவியிலுந்தான்
பொருத்தியே நீர்சுண்டப் பொலிவுடன் குகைதன்னில்
இருத்திடச் சுண்ணமாம் குகைச்சுண்ண மிதாண்டே.



உருக்கிடு வெள்வங்கம் உலகுதனிற் பதருமலும்
பெருக்கிடும் சுண்ணமீயப் பேசாதுகண் விட்டாடும்
சுருக்கினில் ரசிதம்தூய்மை சோதிபோல் துலங்கும்
அருக்கனைப் பழிக்கும் அரிதரி தாண்டையே. 364

சுண்ணமு மரிசியிடை சுருக்கத்தில் காலைமாலை
திண்ணமா யுண்டிடவும் திரேகம் கனகமாம்
எண்ணமே யலையாது ஏகாக்கிரச் சிந்தையாம்
நண்ணுமே குண்டலிநாரி யவள்பதந் தன்னிலே. 365

நாட்டிலே சிவயோகி கட்கிது நளினமாய்ப்
பூட்டகந் திறந்திடும் புறட்டில்லை யந்திசந்தி
தாட்டிக மாயுண்டு சடலத்துறுதி கூட்டி யுச்சி
மேட்டதி லேறிவெகு சூக்ஷமித றிந்திடே. 366

வாதநோய்களுக் கதிகாலையில் வாங்கியுண் டு
தீதறும்படிச் சுழினைத் திருமுனை யூடுபோய்
பேதமேது முருது பேணிக்கருத்தோ டிருந்திடில்
நாதமே யொலிக்கும் நன்மையா யிதுசுண்ணமே. 367

அகார மென்ற வமுரிதன் சாதனையால்
உகாரமது உனக்குள் உறுதியாய் வலுத்தது
மகாரமென்ற மௌனம் மடைதிறக்கும்
சிகார சிதாகாசப் பெருவெளி சித்திக்குமே. 368

தீட்சையினல் அகார உகாரந் தெளிந்திடும்
காட்சி கைகூடும் கருத்துடன் குருவால்
சூட்சமமிது சொல்வார் பெரியோர் சோதிப்பார்
தாட்சண்ய மும்மையை யோடருள் கூடிடே. 369

## வேறு

முப்போதும் வாசிமுனை நோக்கித்
தப்பாம லம்மையின் தாள் பணிந்து
இப்பாரில் யோகமீ தெனத் தெளிந்தேன்
செப்பார்கள் சிலாக்கிய மீதாண்டே. 370

தள்ளினேன் தனிப்புளியு முப்பும்
துள்ளினேன்உரைப் பும்துலே தூரம்
உள்ளினேல் உந்திக் கமலமுறுசோதி
மெள்ள வேயிகம வெறுத்து மேலாண்டே. 371

அறுத்தேன் அந்நிய மாதராசை
வெறுத்தேன் வெறுங்கள் கஞ்சாவும்
குறித்தேன் குண்டலிஇரு செழுமலர்ப்பதம்
நெறித்தேன் வாசிதனை நேர்மையாய். 372

கண்டதும் குண்டலி காலன்போலுமே
மண்டில மட்டும்சீறி மதர்த்துத்தான்
கொண்டதும் யான்பதறி னேன்கொலு
மண்டபத் திருந்துமதி வந்ததெனுண்டே. 373

அண்டமுங் கடந்தேனதி யாச்சரியம்
பிண்டத்தினுட் பிறழாமலும் பிழைத்தேன்
உண்டன னமுரிஉச்சி யிருவேளையிலும்
எண்டிசை யிலும்பானுயர்ந் தேனுண்டே. 374

நிலைத்தது துருத்தி நின்றது ஓடாமலும்
குலைத்திடு மிந்திரியம் குலைந்தது மாயமாகச்
சிலிர்த் ததுமேனி சிவந்ததுமுகம் திட்டமாய்
வலுத்தது காயம் வையகத்தி லாண்டே. 375

வேறு

ஊதிநான் கண்டஓங் காரவாசி யதலால்
சாதிசதயம் சண்டாளர் வகுத்ததென வேதேர்ந்து
ஆதிசக்தி யவளருள் வாய்க்க அணுவளவும்
பேதியா திருந்தேன் பிசகாமலும் நிதமே. 376

செம்பு சுத்தி

மட்டறும் துருசதின் சுண்ணமும் மகிழ்ந்தம் முறைத்
திட்டமும் பதனமாய்த் திடமுடன் வராலி யிலேயதில்
இட்டமாய் இடித்திடச் சாறுவழிந்து ஏகோ பித்துத்
தட்டற நீராய்ஓடியது வெள்ளத் தன்மைபோலே. 377



வேறு

உச்சிதமாய்த் தாம்பிரம் உறுதியாய்
தகடதும் வெகுமெலினம்
சொச்சிதமா யடித்து முன்சாற்றினில்
தோண்டி யிட்டுப்
பச்சிதமாய்க் குழிவெட்டி மண்டலம்
பாய்ந்து வைத்து
இச்சிதமாய் எடுத்திடக் களிம்பற்
றிருந்த தாண்டே. 378

துரிசற்ற தாம் பரத் தகடது
தூய்மையா மாற்றுறுகாண்
பரிசற்றவே தையிதால் அதிகம்
பகரும்வெள் ளங்கமாம்
பெரிசுற்றசுண் ணமும்திணையா
னதற்குப்பிச காதுயினி
வரிசையாம் மாற்றேழு
வாய்த்தது வழங்குவாயே. 379

வேறு

கொல்லுலேயி லும்பதமாய்க் கொண்டுகுகை யிட்டூதி
வெல்லுமுருக் கும்முகத்தில் மேன்மையாய் லிங்கமது
மெல்லவும்சம னிடையிட்டூதிப் போடுவியப் பேதுகாண்
சொல்லவும் போமோமாற் றெட்டுசுயம் பிரகாசமே. 380

மூட்டிடு பின்னுமக்குகை முனைதவருதே எடையது
நீட்டிடு செங்குமரிச் சாற்றின் சுருக்கு நிச்சயமாய்ப்
பூட்டிடு பின்னும்ரச சூதபற்பம்புனித முடனே
தாட்டிக மாம்வயதொன்பது தரணியிலாரறி வார்காணே.

உள்ளமது கனகமானுல் உறுதிவெளி லோகமெலாம்
கள்ளமதிருந் தால்கபடினுல் கடுகளவும் கைகூடாது
தெள்ளமுத முண்டுசிவயோக நிட்டைத் தெளிவினுலே
பள்ளமும் மேடும்இன்னதென்று தெரிந்திடும் பாரினிலே.

மதியமுதம் பொழியும் மகவாஞக யோகம்
பதியளவும் பனிரெண் டாண்டென் பார்கடாம்
விதியது மேவினுல் விட்டகுறை தரலினென்றும்
துதிகுண்டலி யவளால் சொரியு மமுதமே. 383

உதகமென் றவமுரி உனதுள்ளே தான்வழியும்
இதயகம லந்தனில் இருவிகற்ப மறவும்
சதமெனவும் சதாயோக நிட்டை சாதித்து
நிதமும் அமுறியுண்டு நீடித்திருப்ப ராண்டே. 384

குறிப்பான மூலைப்பால் கொண்டிடார் கசடர்
வெறுப்போடு உலகம் சுற்றிவெறுங் கையாய்ப்
பறிப்பார் கள்பின்பு பணந்தரான் பதர்கள்போல
நெறிப் பார்வையில் நின்றிடாமூடர் களாண்டே. 385

பரிகாசமல்ல விந்நூல் பஞ்சரெத் தினம்
துரியமும் அதீதத்துணை நிலையுமுணர்ந் திடவும்
கரையேற லாகும்கருத் தால்வழி யுணர்வார்
சரியாக வன்னவாலை தாள்மலரர்ச் சிப்பாயே. 386

ஓயாமலும் கனகம் உலுத்தரவர் செய்யவென்று
வாயாலும் பேசிவழி யுணராது வையகத்தில்
நோயாளி தமைக்கொன்று நொந்து போவார்
பேயாவ ரிவர்பேச்ச றிந்துவிலகு மாண்டே. 387

அருள்வந் தெய்திடில் அருட்கண் பார்வைத்
தரும்கற் பமதுதள்ளா ட்டமின்றித் தானறிந்து
குருவந்தவன் குவலயந் தன்னிலும் கூருன்
மருள்கொண்டு மயங்காது வழியறி ந்திடே. 388

அப்புடன் தேயுவாயு ஆகாசம் பிரிதிவியும்
ஒப்புடன் பஞ்சபூத மதனுல்உலகினிற் கோசமைந்துந்
தப்பியே வெளியைநோக்கித் தனித்துரிய நிலையமர்ந்து
இப்புவி யிருப்பர்விதி இல்லாருக் காகாதாண்டே. 389



## நாகநீறு - வேறு

விட்டிடு மிலுப்பைநெய் யதுவெகு பதனம்
பட்டிடும் கரண்டியில் பணிவதாம் ஏழ்முறை
தொட்டிடு நாகம்தூய் மையாம் துணிவாக
நெட்டிடு பற்பமாக நீள்புவி பிழைக்கவே. 390

கம்பியுப் பொடு சீனம்கா ரம்சாரம்
வெம்பி யப்பதும் மேன்மை யமுரிநீர்
நம்புங் கடல்நுரை உப்பும்ந ளினமாய்
வம்பிலா மலுமிடித் துவை சூரணம். 391

தாக்கிடு வீரச்சுண்ணம் தகமை யாக
வீக்கிடு சமன்பூரம் வெள்ளையு ந்தான்
ஆக்கிடு சுண்ணக் குகை அது தன்னில்
மூக்கிடு மூசைதன்னை முனைந்து மணலிலே. 292

வன்னி யிட்டெரி வண்மையாய் நாற்சாமம்
இன்னி லந்தனில் இதற்குநிகர் ஏதுமில்
சொன்ன வாறிடச் சுண்ணமும் பற்பமாய்ப்
பின்னமில் லாமலும் பிரித்தெடு உறுதியே. 393

## வேறு

சுன்னமோ டுசேர் துரிதறுட னதீத
மென்னும் வீரமும்மேலும் ரசசூதம்
இன்னமும் சுத்தநாத மிதுவுஞ் சேர்ந்து
நன்னயம்பெற நாட்டு குழிக்கல்லிலே. 394

கல்லிலிட்டமுரி மூலப்புளி கடிதிலூட்டி
அல்லியின் செஞ்சா றதுவும் அளவதாக
மெல்லவும் சேர்த்து அரைத்தும் பதனமாய்
வல்லபத் தோடுவே வழித்திடு மகலிலே. 395

கதிரொளி தன்னிலும் முகம்படக் காணும்
பதிந்திடும் நீர்வறண்டு படியும் பச்சையாம்
எதிரிதற் கேதினி சீலைஏழு பிசகாமலும்
சதிருடன் செய்சடுதி பிற்புடம் குக்கிடமே. 396

பிரித்தெடு சீலையைப் பேதமும் ஏதுகாண்
தரித்திடும் பற்பமும் தவளமாம் தாழ்விலா
திருத்திடும் இதனையே இருவேளை தன்னிலும்
பொருத்தியே உண்டிடப் போகும் பல்நோய்களே. 397

காசமெ ட்டும்காத தூரம் கடிதான
ஈசரோகமி தற்குள் நாசம் குன்மம்
பாசமும் பதறும் நீரெறிப்புப் பறக்குமே
நாசமாம் வாந்தி சோபதாபமும் நாடிடே. 398

கண்டமா லைபிர மேகம் கண்டவிஷம்
சுண்டுமேகம் சூலை ஆகாத விக்க லேப்பமும்
தண்டிடா தரோசிகம் தள்ளாடும் வாயுக்கள்
விண்டி டாதுஓடும் வெகுவியப் பிதாண்டே. 399

கருமவினை யினுற் கட்டிய நோய்களும்
தருமம் புரியாது தடித்திடும் பலபிணிகளும்
பருவகால முணராது பாவித்த புணர்ச்சிப்
பிரியத் தாலுறும் பிணிகள்வாய் பேசாதாண்டே. 400

வஞ்சக மில்லை மாதுளங் கனியினீரும்
அஞ்சிடும் பனிநீர் இளநீர் இதற்கனுபானம்
மிஞ்சிய கஞ்சாவபின் மெலிவுறும் கள்ளும்
அஞ்சியே நீக்கி அருந்திடந் தெளிந்திடுமே. 401

## பத்தியம்

மங்கையர் புணர்ச்சியும் மயக்குறு வத்துவும்
பொங்கிய துர்கருமம் பொல்லாத சினமும்
தங்கிய நடையதிகம் தான்பலவும் நீக்கியே
திங்களும் பத்துமுண்ணச் சித்தியுட லாண்டே. 402

பலவீனப் படாமலும் பச்சைப்பய றரிசியும்
நலமாகு மாவின்பாலும் நன்றுகக் கூட்டித்
தலமேற் சர்க்கரை சற்றுக்கலந் துபொங்கி
அலையா திருந்திட நோய்கள் அலறுமாண்டே. 403



## வேறு

கதிரொளி யோடு கடிதினில் திங்களும்
வதியொளி யுந்தானே வாய்க்கும்—பதியொளியா
மூலப்பதி யிருந்துமூளும் சுழிமுனையில்
சாலத் தெரியும் அதுந்தான். 404

முப்பாழுக் கப்பால் முளைத்த துரியமது
இப்பாரில் யாரறிவார் யோகிகடாம்—தப்பாமல்
அன்னை அடி மலரை ஆதாரத் தேயிருத்தி
இன்ன லறக்கண் டிருப்பா ரே. 405

காயமது குலைந்தாற் காரியமும் சிக்காது
ஓயும் காரணங்க ளோயாது—பாயும்
வகையது தான்மாற்றும் வழியமுரி பானந்
தகைமை யுடனே யருந்தத் தான். 406

ஆகாசத்தே தோற்றும் அந்தரங்கந் தானேகம்
வாகாக வாசிவசப் பட்டால்—தேகாதி
மூன்றும் திடமுடனே முப்பாழுமே கடக்கும்
சான்ற அறிவோர் தமக்கு, 407

## நாதத் தயிலம் - வேறு

உயர்ந்த வெண்காரம் சாரம் உவருப்புமே
அயர்ந்த கம்பியுப்பும் அதீதபாரை யுப்புடன்
வியந்த கடலுப்பும் மேவுசவட் டுப்புமூலம்
பயந்த அமுரியும் கலக்கிப் படியவை திரிநாளே. 408

வைத்திடு திரிநாளும் தெளிய வந்நீரிலே
உய்த்திடு மால்தேவி உதவிடு வீரம்கௌரி
நத்திடு மேற்சிலை நாதகெந்தி யதுவும்
எத்திடு வெள்ளைலிங்கம் இவைகளைத் தூளதாய். 409

**வேறு**

தூளதாகவும் தூக்கிடு கிழிதனில் துறையாகவும்
மாளவு முன்னீரில் மாட்டிடுகிழியிதை வயணமாய்த்
தாளவும் வன்னிகமலந் தாக்கிடு நுரைவராது
தேளது போலவும் தூளும்கட்டிடும் தெரிந்திடே 410

சீர்மேவிய கதிர்முகம்படவும் செயமுட னிதனைப்
பார்மேவி யோர்பாண்ட த் திட்டபின் படரும்
கூர்மேவிய கிரணச்சூடதனுல் குணமாய்ச் சுண்டும்
ஏர்மேவிய இதைவெகு பதனமாய் எடுத்திடே. 411

சக்கையே தினியொரு வாலுகையில் சடுதியாகத்
துங்கமா முப்புத்தூள் தனைவிரல் துவைக்காமலும்
தங்கவோட் டினிற்கட்டிடு தாட்டிகமாக மேலும்
பொங்கவே வேறுபாண்ட மிட்டுப்பொ திந்திடே, 412

வழிந்துவரும் வாலுகையின் வழியதாய்த் தைலம்
இழிந்துவரும் இதற்கீடென் சொல்வேன் இனிநான்
அழிந்த உடலும் வலுக்கும் அரியரச சூதம்கட்டும்
பிழிந்தரச மிதைப்பிசகாது சுருக்கிடப் பேறிதே. 413

சொன்ன முறையைந்து தரம்துரிதமா கவும்செய்
பின்னமு மில்லைபின்புநற் சூதமபிலம் தாகும்
இன்னமு மிந்நூற்பஞ்ச ரெத்தினமிதன் மகிமை
தன்னைய றிந்தால்சந்தேக மில்லைதா னுண்டே. 414

நவலோக மாற்ருரும் நாடியிந்தத் தைலமதால்
சிவலோகம் போகலாம் சித்தர்களும் மயங்குவார்கள்
தவலோக மகிமையும் யிதற்குச்சற்றுத் தாழ்ந்திடும்
பவலோகங் கடந்துவாலைப் பதமலர் பணிந்திடாண்டே.

பத்துக்கொன்று தாக்கிடுதாம் பிரமதனிற் பணிவாய்
வித்தையிது மாற்றுத்தசபத்து வெகுமேன்மை வேதை
முத்துப்போலச் செயசூதரசமதை முனைந்துதைல மிட்டுச்
சுத்தத்தீ பாக்கினிதொடுத் திடக்கட்டி விடுமாண்டே. 416



**வேறு**

காரசாரத்தால் சூதம்கட்டுண்டு
தீரமாகவும்வீர மேறும்திடமுடன்
தூரமோடவும் தொல்லையேதிதனுல்
சாரணை யும்புட மொன்ருென் ருய்த்தானே. 417

பங்கமறச்சார ணையும்பத்துப்பத்துத்
துங்கமுடனிட்டி டவும் தூய்மையாய்
வங்கமதைவைத் துருக்கிமாட்டிடவும்
பொங்குமதனீர்பிரி ந்துபோகுமாண்டே. 418

வைத்திடுவாய் வாயதனுட்கண்டத்தில்
பொய்த்திடுமே லோகம்போம் ககனமும்
உய்த்திடுமண்டபகி ரண்டமும் உண்மையாய்
எய்த்திடச்சுற்றி வரலாம்இசைந்துமே. 419

வெள்ளை யாம்ரசித மதில்வியப் புறவும்
மெள்ள வுமிதைத் தாக்கிடவும் மேன்மையாய்த்
துள்ளுமே ரசிதமூலை யில்தூய தாமாற்று
விள்ளுமே சோடசம் விந்தை யிதாண்டே. 420

**வேறு**

இந்தவிதம் சட்டமுனிக்குக் ககனமேற வும்யானும்
சொந்தமுட னருளினேன் சுற்றிரண்ட கடாகம்
வந்தவிதம் போல்வழக்க மதுதானறிந் திருந்து
விந்துவினுல் கனகமும் விளம்பி னேனுண்டே. 421

சுருக்குடனும் குடவனில் தைலம்தொடுத்திடவும்
கருக்காது மாற்றுப்பத் தரைகனக மதாகுமிதைப்
பெருக்காது நூற்றுக்கொன்று பெருமைய தாயீந்து
இருக்கா திருக்கும்வகை யறிந்திருந் திடாயே. 422

செம்பொன் னுல்துரிசி னுல்செய மதாகும்
வம்பில்லை யிதனுள்மாட் டிடுபத்துக் கொன்று
நம்பிடுவாய் வயதுபத்து நாட்டினில் கடினம்
அன்பினுலிவ் வழிஅறைந் தேனினியறி யாண்டே. 423

குற்றமேது யினிவெள் வங்கம் குறிப்பதாகச்
சற்றுமசங் காமலும்தா னுகுநூற்றி லொன்று
உற்றிட வும்மாற்று உண்மையாய்த் தசமே
பற்றற்ற வர்க்கும் பரிசிது வாண்டே. 424

தயிலமித ஞற்சடலம் தான்வலு வாகும்
சயிலநீரறி வார்செய் வார்சந் தேகமில்லை
செயலுசா விடுமூர் களிற்சேர்ந்து மாந்தர்
வயமுலா விடவழியி துளவுமிது தானுண்டே. 425

மூலப்புளிச் சுண்ணத்தால் முடிந்தது முப்புவுமே
ஞாலத்தினில் ஏமமும்காயமும ஞானமும் சித்தியாம்
சீலத்துடன் தினம்இரு வேளைகற்ப முண்டால்
பாலத்தைத் தாண்டிக்கரை சேரலாம் பரிந்துமே. 426

தானுகநின்று தவித்துத் தள்ளாடிப் புகையுண்டு
போனுர் கள்செத்துப் புவிதனில் கோடாகோடி
ஏனேயிதை யறியாமலு மிருந்தார் யானிரங்கி
வானுளச் சொன்னமுறை யிதுவகை யறிந்திடே. 427

துரிசினுற் செயரச சூதமும் துலக்கமாய்
வரிசையுடன் கட்டும் வாதிக ளறியார்
அரிதாகு மிந்தவைந் நூற்றிற் சொன்னேன்
பெரிதென்று நம்பிப் பிரியமாய்த் தெரியுமே. 428

வேறு

நாழிகையில் வந்திடுவான் நமனென்றும் பாராமல்
பாழினிலே மனதைப் பாயவிட்டார் – சூழிரவி
சூதமதி கெந்திதனைத் தொட்டும் பிடிக்காமல்
வாதமது வாமோ வழுத்து. 429

சுட்டுக் கரியாக்கித் தொல்லுலகிலே தொலைந்தார்
கட்டுக் கடங்காது காணுமோ—பட்டுமினிப்
பாராத பாவிகட்குப் பாழாச்சு லோகமெல்லாம்
ஆராய்ந்து ஓதி அறி. 430



ஞானிகட்குவையகத்தில் நன்மையுடன்தொட்டதெல்லாம்
ஆனியறத் தான்பழுக்கும் ஆய்ந்துபார்—மேனியது
வெம்பிக் கருகினவர் வீணுவார் வேறேது
அம்பிகை பாதமலர் ஆர். 431

இவ்வுலகில் ஏமமது எங்கும் இலகுமதைக்
கவ்வினவர்க் காகாது காணுவீர்—அவ்வும்
உவ்வும் உணர்மவ்வும் உற்றறிந்தா லதுவே
வவ்வும் கனகமது வாம். 432

வேறு

கலியேதுகாண் ஞானிகட்குக் கசடற்ற பெருமையினுல்
நலிவேது அரசரும் நயந்து மவரடி பணிந்து
மெலிவாகப் போற்றுவார் விடுபட்ட வர்க்காசை
உலையாது உறுதிகடைப் பிடித்தொழுகி னூர்க்கே. 433

பொய்ஞ்ஞான முற்றுப்பூவையர் மயக்கிற் பொருந்தியினி
எஞ்ஞான முங்கூடாதென யிவர்இறக்கும் வழிகண்டு
விஞ்ஞான முத்திசித்தி யருள்மேம் பதியைநாடிடார்கள்
மெய்ஞ்ஞான சற்குருவகத் தீசர்மென்பத மவைபோற்றி.

வேறு

கட்டோடே அழியத்துறை கண்டார்
கருது வார்கள் பெண்கள்
பட்டாலே பொட்டாலே பாழ்கிணற்றில்
மூழ்கி மெய்ச் சேறு
பட்டாலும் சந்தனம் சவ்வாதெனப்
பரவசமா வார்காண்
விட்டார் புவிமாய்கை வாழ்ந்தார்
மதிப்புற் றுத்தாமே. 435

தப்பாதகற்ப வழலைமுறை யெல்லாம்
தழுவி மெய்ஞ்ஞானம்
சொற்போத வெட்டியொடு தொடரெண்
ணூறில் தானறிவார்

ஒப்பாதபேர் கட்குரைத்தேன் உலகின
ரறியப் பஞ்சரெத்தினம்
இப்பாரிலிதற் கேதிணையென்குரு மலர்ப்பாத
மாணை யாண்டே. 436

## வேறு

சித்தாதிகள் விடுத்தகதைகளைச் செகதலமாண் பர்காணுர்
சுத்தோதகம் சொன்னேன் சுரோணித நீர்க்காடிதன்னைச்
சத்தானதிதைக் கைவிடார் சகலமும்கை வசமாச்சு
செத்தாற்பிழைப்பதேதுகாண் திரிமூல வட்டம்பாரே. 437

## பாஷாண பற்பம்

நன்ருனகள்ளி சதுரமதுதான் நாட்டினில் மெத்தவுண்டு
குன்றேறிக் கண்டுமதுதனைக் கொண்டதிதப் பாலெடுத்து
இன்ரேடு நாண்மூன்று வெள்ளைஎழிற் பாஷாணம் விரவி
அன்ருடம்வைரவியில்பெரு மகலிலிட்டதும்சுண்டிடவே.

கற்பூரமானும்பூரம்சூடனது கவின்பெறத்துளதாய்ப்பொடி
பொற்பாகச்சேர்த்தரைசாம மட்டும்புகழ்பெறமயனமதாய்த்
தற்போதர் தருமதீதவண்டு நாபிதனை யொக்கவும்விடு
முப்பாலுந்தவருதிந்தமுறை மொழிந்தேன்ரவியில்நாட்டே.

நாட்டிடவும் சுக்கானதின் பொடிநவிலும் பொற்சுண்ணம
சூட்டிடுநீ சீலையதுஏழு முறைசுருக்கினி லகலிலிட்டு [தைச்
மாட்டிடு குக்கிடப்புடம் மௌனமாயிரு வாய்பேசாதே
காட்டிடும் பாஷாணபற்பமிது கண்டவரெவர்களாண்டே.

## வேறு

கொட்டாவி விட்டுமுயிர் குலைந்த சவமேனும்
தட்டாது உக்கிரமாய்த் தானெழுந்து பேசும்
எட்டாது பற்பமிது ஈரரிசி யாகக்
கெட்டாருக் கிட்டாவனு பானமுங் கொண்டே, 441



## வேறு

சங்கனது சாறதனில் சற்றும் பிசகாமல்
மங்களம ணேன்மணி யாம்வாலை யருளாலே
இங்கிதமு டன்தர வும்ஏகு முடன்சன்னி
சங்கையினி யேதுசிவன் தந்தமுறை யாண்டே. 442

வன்மைபெறு குட்ட முடன் வாதமிவை நோய்கள்
கம்மிடுசி லேத்துமமும் கடல்புக்கி யோடும்
உண்மையுடன் குன்மமுள மாந்தையொடு வாய்வும்
செம்மைபெற யிந்தமுறை செப்பினேனு னுண்டே. 443

குக்கல்வலி காக்கைவலி குமட்டுமரோ சிகமும்
விக்கல் விஷப்பாண் டுடனேவெள்ளை குறையும்நோயும்
பக்கமணு காதுயினிப் பாகவிலைச் சாத்தில்
சிக்கெனக் கொடுத்திடவும் சிலாக்கியமு மாமே. 444

விப்புறுதி யாப்புமெலி விக்கல் பக்கசூலை
ஒப்புவிரை வாதமும் மூதலானைக் காலும்
தப்பும் பிசகாது உடன்தாக்கு கரிசாலை
அப்புவினி லச்சம தகற்று புளியாகா. 445

## வேறு

அகமெனும் செம்புருக்கி அரிசியிடை அதில்தாக்கு
சுயமெனும் சொர்ணம் சொல்லரிய சோதிப்பிரகாசம்
வயததும் தசமாற்று வளமுடன்தனை மறுமுறையும்
நயமுட னுலை யிலிட்டுநாத கெந்தித்தைலம் சுருக்கிடே.

சுருக்கிடவும் சொர்ணம் துரிதமுடன் வெட்டையதாம்
நெருக்கிடவும் பொற்றலை நெல்லிச்சா றதுதன்னில்
பெருக்கிடவு மிடுபுடம் பிசகாமலும் சூக்கிடம்
எருக்கிடவும் செந்தூரம் அதிவெகு சூக்ஷமமாண்டே. 447

கற்பழியாமலும் கள்ளபினி யுடன்கஞ்சா புகையாமலும்
வெற்பான உடலதுமெலி யாமலும்மேன் மையாயமுத
நற்பானமுடன் கொண்டிடவும் நலிவேது காயமது
பொற்போலு மிறுகும்பூரண மாம்வாலை யருளாண்டே. 448

முளைத்தெழுந்த செழுஞ்சோதி மூலத்திடை யேநின்று
விளைத்தெழுங் கனலேமே லெழுப்பியம்மை யருளால் [ணத்
களைத்திடாம லதீதப்பார்வை கண்முன்கண்டு கற்பமுண்
துளைத்திடு மாருதாரமுந் துரிதமாயூடு றுவித்தானே. 449

செந்தீக்கன லெழுப்பியதில் செலுத்தும் பனிரெண்டாண்டு
நந்தீசருரைத்த வாணையிது நாட் டினில்சூக்ஷும மறியாமலும்
விந்தானும் வன்னியென விதரணையது தெரியாமலும்
நந்தீமை விலகுமெனச் சாடினுர் நாட்டுநெருப்பிலே. 450

பிண்டத்துறுஞ் சுடர்பேதித்துச் சீறிப்பிதிர்ந் தெழுந்து
அண்டத்தினுச் சியில்தாக்க அமுதமது சுரந்திடும்
கண்டத்தி னிடைவாசி கால்விட்டோடா தயர்ந்திடும்
சண்டப்பிர சண்டசமர்த்த வாலாம்பிகை சாதகத்தால் 451

சொற்குறி காணுமலும் மனிதர்கடாம் சோலைபுக்கித்
தற்குறிபோல் சுள்ளிகள் பொறுக்கித் தணலிலிட்டும்
விற்குறிமேவ விழைவார் வீணரவரை நீக்கிடு
சற்குருபாதம் சதாகதியெனத் தாழ்ந்திடாண்டையே. 452

சட்டைகக்கு மோராண்டின் சாதகத்தால் தணியாத
வெட்டைய கலும்பலநோய் வெடுவெடுத் தோடிடும்
நட்டமும் படாதுநானு மஞ்சியோடிப் போவேன்
இட்டமுட ஞேதிஞரகத்தீ சர்எனக்கு மாண்டே. 453

## சதானந்த செந்தூரம்

கெந்தியரி தாரமனே சிலையோடு கேளும்
விந்துரச பூரம்விளை வானநவச்சாரம்
இந்துவத னுப்பொடுந்தா னீசனவன்பாரி
இந்தவகையத் தனையும்ஏற்று கலுவத்தே. 454

விட்டுவிடு வெண்கரு வும்விட்டு மரைசாமம்
பட்டவை கள்தான்மெழுக தாகவுமே பாங்காய்த்
திட்டமுடன் சிவந்துவருஞ் சீரமுரி மேலும்
இட்டுமறை பின்னுமொரு சாமமினி தாண்டே. 455



தீதற்றுச் செந்தேன்பாயும் சிகரனச் சிதாகாசப்
போதுற்றுத் தழைக்கப் புழைவழிகண் டார்க்கென்றும்
யாதற்றும் பிறப்பிறப்பற்றும் என்னம்மை வாலையம்மை
தாதுற்ற அடிமலர்த்தாள் சதாநந்ததூர மொழிவேனே.

பாசவறையில் செல்கின்ற பணமுடியர வெனும்தீய
வாசியைக் கூட்டிவழிதனில் மடைமடக் கிக்கபாலம்
ஊசித்துவாரத் திடைச்செலுத்த உபாயமிச் செந்தூரம்[னே
தேசிகனற்பாதம்தெண்டனிட்டுச் செய்யுமெனச்செப்புவே

வானுலாவும் பனிவரைவாய் மருவற்ற நீரொருபடி
தானளந்து மொருபாண்டத் திடுசற்குருவைப் போற்றி
ஊனமென்று கருதாமலும் இனிதாகவும் கரைகம்பியுப்புப்
பானமிதனைத் தெளியவை பரிதிதனில் திரிநாளே. 458

சாகரமும்வற ண்டுமேகமாம் தனிக்கதிர் வெம்மையினுல்
தாகநீரது தாண் சுண்டும் பதமறிந்து தவருமலும்
ஏகமான இகன்குழம்பை யினிவேறுபாண் டத்திட்டும்
ஏகவிந்துரச நாதகெந்தி சேர்த்தரைத் தாண்டே. 459

பாகமாகவும் யிருநான்கு சாமம்பக்குவ மாகவும்
சோகமின்றி விடாமலும் துரிதமுடன் அரைக்கவும்
வேகமாக மெழுகதுபோல் விகசிதமாகத் திரண்டு
போகும்பின்னும் விட்டமுரி புதுமையாக வும்கல்லிலே.

தாக்கவுமிடைக் கிடையரிதார மனேசிலை லிங்கம்
பார்க்கவும் பஞ்சபூதமாச் சுதுபவுஷா ரறிவார்காண்
ஊக்கமது விடாமலுமரை உரைத்துப் பின்னுமுந்தான்
வீக்கமுடன் சாமந்தான் மூன்றுமேல் விளம்புவேனே. 461

பூதவுடற் சித்திபுகழதீதப் புளியாரைச் சாறும்வெகு
ஆதரவுடன் பொற்றலை அதிசயமாம் சீத்திலதன்வழி
நாதமாஞ்சாறும் நளினமுடன் நல்லவுரி யதினுடன்
தீதறும்சாறும் தினுசுக்காகச் சாமமொன்று தேர்ந்தே. 462

காலமது வீணுகாமலும் கடிதினில் மெழுகதைப் பதமாய்ப்
போலுமது குழிக்கல்லினிற் புதுமையுடன் திரண்டுமேலும்
சாலவும்வரும் பாகமறிந்து தவறிடாமலும் தாக்குடனே
காலனெனவும்வீரச்சுண்ணம் கடுகளவுங்கவனமாண்டே,

6

ஊட்டிவிடு சுண்ணமாம் வீரம்ஒருகடுகள வும்துரிதமாய்
மாட்டிவிடு குழிக்கல்லினில் மத்தித்திந் தப்படியும்
நாட்டிவிடு வகலதனில் தளினமாய் ரவிமுகம்படவும்
ஓட்டிவிடுசீலேயேழும் உண்மையதாய்ப்புடம்கௌதாரியே

சீக்கிரமாய்க் கௌதாரிப்புட மிடவும்திர ண்டுகட்டி
நோக்கிடவுஞ் செம்மையிதன் வண்ணம் சிறுமையது
போக்கிடவு முன்சொன்ன சாறுபுறட்டி மறுபடியும்
காக்கிடவு மரைத்துச் சீலயாமலும் புடமிடே. 485

அடுத்துமேதா னிந்தவிதம் ஐந்துமுறை யாகவும்
தொடுத்திடச் செந்தூரமாகும் தோஷமேது மின்றியே
எடுத்துமே பணமதாக ஈந்திடத்தீர்ந் தோடுமே
கடுத்துமே நோய்களெல்லாம் காணுமோ சகத்திலே. 486

கண்டதொரு வல்லாரை கனமூலியது காய்ந்திடித்து
விண்டதொரு பணவட்டதில் வெம்பிடவும் தீயில்
சுண்டிடவும் இளகியமாகத் தேன்விட்டுப் பிசைந்து
மண்டிடவும் செந்தூரம் கழஞ்சிமடிந் திடுமேகமே. 467

மேகமென்ற தெல்லாமடி ந்திடும்மேன் மையாகச்
சாகசமுடன் கையான் சூரணத்திற் கழஞ்சியது
போகவும் கெடுக்கப் புக்கியோடும் சாகரமே
சோகமுட னீளயசீரண மும்துரி தமாகவே. 468

கோபமுடன் முப்பானெட் டட்டகுட்ட குன்மமும்
சாபமுட னகலும்சகல தோஷங்களும் சன்னியும்
தீபமுடன் கற்கண்டதின் பொடிதனில் தேன்விட்டுத்
தூபமிட்டுத் தரத்தொலே தூரம்போம் சிலேத்துமமே. 469

சேர்த்திடும் விலாமிச் சுச்சிறிய தாகவும்
பார்த்தெடு வில்வம் பழன்மதன்சா றும்நன்னரி
ஆர்த்திடு வெட்டியின் வேறதுவும் ஆகவும்நீர்
சார்த்திடு வன்னியிட்டுச் சட்டியி லாண்டே. 470

அடுப்புறவும் அனல்மீறி அதுகொ திக்கவும்
கொதித்திடு செந்தூரமது கழஞ்சு துரிதமாய்
விடுத்திட வும்சுண்டி மேலும்வரும் இளகியம்
மடித்திடும் நோய்களுக்கு மகாகால ஞண்டே, 471



காலனுமி தைக்கண்டு கடி தினிலோடிப் போவான்
ஆலகாலமு மிதைஅசைக் கொணுது அதிகமாம்
தூலதேகமும் வலுக்கும் துணிந்தொரு மண்டலம்
மேலுமுண் டிடவேறு கற்பமினியே ஞண்டே. 472

சுத்தமாம் சுத்தோதகப் பெருமையினுல் சுருதிசொன்ன
வித்தையெல் லாமாகும் வேறுசலன மிதற்குமில்லே
சத்திநாத விந்துமொக்கக் கலந்துசலனமு முண்டாகும்
எத்திதனை யறிந்தால் இனிபிறப்பில்லே யாண்டே. 473

கட்டுக்கதை கள்மொழிவார் கனகமும்செய் வோமென்று
துட்டைச்சுற்று வழியறியாது துடுக்காக வாய்மதம்பேசிக்
கெட்டுவிட்டோடினவர் கோடியுண்டுகேவல மாகாமற்ருன்
இட்டமுடன் பஞ்சரெத்தின மிதில்இயம்பினே னறிந்திடே.

**வேறு**

இன்பமுடன் கடுக்காய் தான்றி
இனியதாம் நெல்லியந்தின்ரசம்
தென்பருளும் கீழாநெல்லியுந் தேனதும்
விட்டு நன்ருகத்தான்
அன்புடன் பழச்சாறதும் அதீதமாங்
கருந் துளசிச்சாறும்
நம்பியே விட்டுநன்ருய் நளினமாக
வன்னியிட் டிடாயே. 475

இட்டிடவும் பாதகன்பதமாக இனியது
சுண்டி வரும்போது
விட்டிடுநீ ஆவின்நெய்தான் மேலு
மதைக் கிண்டிப்பின்பு
சட்டென மிறக்கியாறவிட்டுத்
தவருமற்செந் தூரமதனிற்ருன்
பொட்டென வுங்கொடுக்கப் போகுமே
மகோ தரமுமாண்டே. 476

**வேறு**

சுக்கானற்ற கப்பலைப்போற் சுழன்று தூளதாகும்
இக்காயகற்ப மறியாமலும் இசைத்திட்ட நாதவிந்து
எக்காரண மெனவும்காணு மலும்இகந்த னிற்பல்லோர்
மிக்காவி விட்டழிந்தார் வேணபேர்களு ந்தானுண்டே. 477

விந்தான சுக்கானதின் விநோதமீ தென்றறியார்
சந்தான மூலிதனைச் சரக்கென்றுந் தரணியிலே
நொந்தார்க ளனேகர் நொடிதனி லாகும்நாதமது
விந்தோடு கூடிக்குருவாச்சு வெட்டவெளி யாண்டே. 478

ஊசித்துவார மொன்றுண்டு உலக்கள த்திலதனை
நாசித்துவா ரத்தினடுவணை யில்நன்மை யாயூதி
வாசியெனும் பரியேறிவை யாளிபோ வார்காண்
யோகியாம லும்சிவயோக உத்தமர்கள் தெளிந்திடே. 479

ஊற்றுநீர் போற்பெருகும் உதகமெனும் சுத்தசலம்
மாற்றும்வகை யறிந்ததின் மாநிலத்தில் நாதவிந்தைப்
போற்றித்தச தீக்ஷைபத்தும் புனிதர்கள் முடிப்பர்வாசிக்
காற்றைப் பிடிக்கும்வழி கண்டார்கள் யோகிதாமே. 480

சத்தான வாழ்க்கைதனில் சடலமதை மறந்துநாளு
வத்தான பானம்செய்து வைதீகமெனும் சன்மார்க்க
சித்தமெய்ம் மார்க்கத் துறவுதனில் கழிப்பாருக்கு
வித்தையறி வாரிதன் சூக்ஷமம் விளம்பினேனே. 481

ஓங்காரவட் டக்குண்டலி உண்மை யையறிந்து
நீங்காதவன் மலரடிநித்த மும்நிலையுற் ருழ்ந்து
சாங்கோப மாகவும்தனித் திருந்திலகி வாழ்வார்
ஏங்காணும் உலகோர்க்கு இந்தமுறை யாண்டே. 482

எக்கலிடும் குருதியும் சீழும் இனிவழியும் சலமும்
கக்கலெனும் குழியில்கச டர்கள்கண் மூடிகளாய்க்
குக்கல்போற் றிரிவார்க்குக் குண்டலித் தாயுமிவர்
பக்கம்வரு வாளோபா வியவராகு மறிந்திடே. 483

உக்கிரமாய்ப் பெண்கள் மாய்கையிலே உரமழிவார்க்குத்
தக்குமோ உடல்தப்பாது காயசித்தி செய்துமென்ன
பக்குவமாகவு மவர்பாழ் நேசமே உதறினால்
எக்காலமும் காயம்இருகு மினிச்சித்தி யாண்டே. 484

சுருக்கான வாலையவள் சுருதிமுப்பு வாய்முடிந்து
கருக்கான சரக்கிற்கெல்லாம் காலனென வுந்தான்
பொருக்கான வர்க்குப்பொலி வுறுநேராகு மென்று
இருக்கான வகத்தீக ரினிதுரைத்தா ராண்டே. 485



வேதாகமங்க ளெல்லாம் விநயமதாய் மறைத்த
சூதானவிந் ததின்சூக்ஷ மதைமுறை யாய்க்கண்டு
ஊதாரியா காமலும்வாசியை ஊதிஉந்தி யில்நின்று
ஆதாரமாறுங் கடந்தார் அறிவாளர் கள்தாமே. 486

முடியுமெய்ஞ் ஞானக்குருபரன் மேன்மை முன்சொன்ன
படியில்ஞான வெட்டிப் பரிபக்குவங் கண்டால்
கொடியதா முப்புக் கசிவும் குலைந்துடலும் இறுகி
நொடியதில் சித்தியாகும் நுண்ணறி வாலாண்டே. 487

கனகமாம் செம்பினைக் கனமுடனு லைதனில்
வினயமுட னுருக்கிச் செந்தூரம் வியப்புடனே
நினைவதா கவும்பணவிடை நீட்டிட வுடனே
முனையும் சோதிவண்ணம் முக்கா லாண்டே. 488

பத்தியுட னிந்தப் பரீக்ஷைய தைப்பார்த்து
வித்தியா சமுமன்றி வெகுபதன மாகவுந்தான்
நித்தமும் மண்டிலம் நிச்சயமாக வுமுண்டிடச்
சித்தியாச் சுதுகாயம் சிறப்பாகவு ந்தானே. 489

காயமது மிறுகிக் கனகம்போல் செவக்கும்
பாயும்கலையு மாருமற் பாலவழி யூடுபோகும்
சேயைப்போல் சென்மங் கோடிவருட முலகில்
மாயமாக வாழலாம் மகத்தான போக்கிதாண்டே. 490

காலையிரு வேளையிலும் கருத்தோடுந் தானுக
மூலப்புளி யுடன்செந்தூரம்முக் காலுமுண்டு
சாலவுமம்மை குண்டலித்தாள் மலர்நோக்கி
ஞாலமிசை சித்தனென்று நாளும்வாழலாமே. 491

வெண்பா

பிண்டத்துட பேதைப் பிறப்பகற்ற லேபிறந்து
மண்டலித்த தாயும் மகத்தாமே—குண்டலியின்
தாளைத்தினந் தோறும் தான்பணிந்து காயகற்பம்
வேளை யிருபோதும் விழை. 492

மூலப்புளி யென்னும்முன்னோர்கள் தாமுரைத்த
சீலத்தினை யுணரச் செப்பினேன்—ஞாலத்தில்
சுத்தசலம் கெங்கைச் சுயம்புவாம் நீரமுரி
சித்தங் கலங்காமற் றேர். 493

சோற்றைச் சுருக்காமல் தூய்மையாய்த் தானிருந்து
ஏற்றி யிருகாலும் இன்பமாய்க்—காற்று
வழியொடு ககன மார்க்கமே நுழைவார்க்கு
அழியாது இக்காயம் அறி. 494

ஆண்டதில் மலமற்று அந்தரங்க நாடிகடான்
வேண்டும் வகைக்கிசையும் வேறில்லை—தூண்டிடவும்
திரிமூன்று ஆண்டதனில் திரேகம் வயிரமாம்
வருமூன்று யோகமதில் வாசி. 495

இருபத்தோ ராயிரத்தறு நூறெனு ம்சுவாசம்
விரிவாக விருந்ததெல் லாம்வியப்புட னென்ருச்சு
சரிபத்துத் தீக்ஷையும் சாதித்ததினுல் தன்மயமாம்
பெருமையாம் சிவயோகப் பிராப்திதரணி யிலாண்டே. 496

இந்திரிய மெனுமமுரி இதன்நுனுக்கமு முணர்ந்து
சந்துவெனவும் அண்டத்தில் தள்ளாடித் திரியாமல்
வந்தவழி நோக்கி வாயிற்படி காத்திருந்தார்க்கு
முந்தும் முத்திசித்தி யெல்லாம் மொழிந்தே னுண்டே. 497

சிட்டருக் கெனச்சொன்ன நூல்சிலா க்கியமாம்
வெட்டியாயிர மும்ஞானமெ னமுந்நூற திலும்
தொட்டவெண் ணூறும்நூறும் தொடுகு றியாய்
விட்டபஞ்ச ரெத்தினமும் விரிவான தாமாண்டே. 498

பஞ்சரெத்தின மெனப் பக்குவர்க் குரைத்த
விஞ்சை நூலாமிந்நூல் வெட்ட வெளி யாகவும்
சஞ்சலத்தினை யறுத்துத் தற்போதநிலை யளிக்கும்
மஞ்சலமிசை வளர்குரு வர மதினு லாண்டே. 499

ஓதிடும் ஆதியாம் உத்தமநாத விந்துபோற்றி
நாதராம் பதினெண்மர் நற்ருட்பத மும்போற்றி
நீதியாயன்னை வாலாம்பிகை நேமகத்தாள் போற்றி
மேதினிப் பஞ்சரெத்தினம் மேன்மையும் போற்றிபோற்றி.

திருவள்ளுவ நாயனுர் திருவாய்மலர்ந்த ஞானவெட்டி
1500-க்கும் நவரத்தின சிந்தாமணி 800-க்கும்
திறவு கோலாகிய
பஞ்ச ரெத்தினம்-500 முற்றிற்று.

———

திருமகள் அச்சகம், சென்னை-79 1992


## எங்களிடம் கிடைக்கக்கூடிய
# வைத்திய நூல்கள்

**கண்ணுசாமிப் பரம்பரை வைத்தியம்** விலை ரூ. 40—00

வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றியது (புதிய வெளியீடு)

இந்நூலாசிரியர் பல வைத்திய நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி இந்நூலை இயற்ற ஆரம்பித்து பல இன்னல்களின் இடையிலும் விடாமுயற்சியுடன் முடித்துத் தந்துவிட்டு இறுதியில் 14-12-1946-ல் தமது 72-ஆம் வயதில் இயற்கை எய்தினர். பின்னர், இவ்வருமையான நூலினை ஷெயார் குமாரர் டாக்டர் க. ராதாகிருஷ்ணன் (L. I. M.) அவர்களைக்கொண்டு பரிசோதித்துச் செப்பஞ்செய்து புதியதாக அச்சிட்டு வெளியிட்டுள்ளோம். ஆதலின், இதுவே கண்ணுசாமிப்பிள்ளையவர்கள் கடைசியாக இயற்றிய சிறந்த வைத்திய நூலென்பது தெளிவாம். இதற்கு முன் வெளிவராததும் தான் இரகசியமாகக் கையாண்டுவந்தது மான அநேக முறைகளை இந்நூலில் கூறியிருப்பதுடன், சித்தர் நூல்களில் மிகச் சிறப்பு வாய்ந்த முப்புவைக் குறித்து தன்னுடைய ஆராய்ச்சியில் கண்ட சிறந்த கருத்துக்களை பரிபாஷையின்றி எளிய முறையில் விளக்கி யிருப்பது இந்நூலுக்கு ஓர் விசேஷ சிறப்பாகும். ஆதலால் ஒவ்வொரு வைத்திய நண்பர்களுக்கும் சிறந்த பொக்கிஷம் போன்றது இந்நூல்.

**சிகிச்சாரத்ன தீபம்** விலை ரூ. 40—00

வைத்திய வித்வன்மணி சி கண்ணுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றியது.

ஒவ்வொருவரும் எளிதிலுணரும் வண்ணம், தேக பஞ்சபூதம் நாடி ரோக நிதானம், செய்பாக விளக்கம், கியாழம், சூர்ணம், மாத்திரை, மெழுகு, லேகியம், கிருதம், செந்தூரம், பற்பம், தீநீர், திராவகம், ஆசவம், அரிஷ்டம், பத்தியம் இன்னும் பல பாகங்களையும் இலம்பகங்களாக வரைந்துள்ளார். இந்நூல் வைத்தியத் தொழிலைக் கற்க விரும்பும் மாணவர்களுக்கும் வைத்தியர்களுக்கும் மற்ற ஏனையோருக்கும் பெரும் நன்மையைத் தரத்தக்கது; வாலையந்திரப் படங்களுடன் கூடியது.

**கண்ணுசாமியம்** விலை ரூ. 20—00

வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள் தமது பெயர் உலகில் எக்காலத்திலும் நிலைபெறுமாறு பரமரகசியமாக தான் கையாண்டு வந்த பல அரிய பெரிய பாகங்களையெல்லாம் சூர்ணம், மாத்திரை, லேகியம், எண்ணெய், தைலம், கிருதம், பஸ்பம், செந்தூரம், ஆக்கிராணம் முதலியவைகளை ஆங்காங்கு கைபாகம், செய்பாகம் முதலியவற்ருல் எளிதில் உணரும்படி இப் புத்தகத்தில் எழுதியுள்ளார்.